தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

50 காசு

19 MAR 1963

வெள்ளம் வருமுன் அணை

★

மொழிப்பற்று, தீதென்றால் இந்திக்கு
முதன்மைதரல் தீதா காதா ?
பழிப்புற்ற அம்மொழியைச் செந்தமிழ்ப்பால்
பருகுகின்ற சிறுவர்க் கூட்டிச்
செழிப்புற்ற நல்லுணர்வைக் கெடுப்பதுதான்
சிறப்பான அறமோ சொல்வீர் !
விழிப்புற்றுத் தமிழரெலாம் எழல்வேண்டும் ;
வெள்ளம் முன் அணைபோ டற்கே !

★ —பங்குனி—



தென்மொழி
இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.

சுவடி 1. ஓலை 2.

தி. பி. 1994
பங்குனித்திங்கள்.
(1963–மார்ச்சு)

●

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித, வித்துவ
ஞா. தேவநேயப்
பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

●

உரிமை, வெளியீடு
தாமரை
உலக முதல்வி

●

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

பிரிவினைத் தடைச் சட்டம்.

எங்குப் பிரிவினை பற்றிப் பேசப் பெறுகின்றதோ, அங்குப் பிரிவினைக்குத் தக்க பொருட்டுகள் இருக்கும் என்பதையும், எங்குப் பிரிவினைக்குத் தடையிருக்கின்றதோ அங்கு விடுதலை வேட்கை மிகும் என்பதையும், வெள்ளையர் ஆட்சியிலும் அதை எதிர்த்துத் தன்னாட்சி நிறுவிய பேராயக் (Congress) கட்சி வரலாற்றிலும் இன்னும் பிற உலக நிகழ்ச்சிகளிலும் நாம் தெளிவாகக் கண்டோம்.

எங்கும் பிரிந்து போக விரும்புவார் சிறுபான்மையராக விருப்பதையும், பிரிந்து போகத் தடை யிடுவார் பெரும்பான்மை யராக விருப்பதையும் நாம் அறிவோம். இப் பெரும்பான்மையரிடமிருந்து சிறுபான்மையினர் பிரிந்துபோக விரும்புவது ஏன்? இதற்குவெறும் உணர்ச்சியும், மேலோட்டமான எண்ணமும், சட்ட திட்டங்களின் வலிந்த கட்டுக் காவல்களால் தகர்த்தெறியத்தக்க காரணங்களுமே அடிப்படையாக விருக்கமுடியாது. பெருத்த அரசியல், வரலாற்று, மொழி, பண்பாட்டு அடிப்படையிலேயே ஒரு சாரார்க்கு விடுதலை வேட்கை

பிறக்கும். அவை பொருட்டே ஒரு கூட்டம் அவ்விடுதலை வேட்கையைத் தடுக்க முயற்சி செய்யும்.

உலகியல் முறைப்படி ஒருவர் பிரிவு கேட்பதோ, இன்னொருவர் அதைத் தடுத்து ஒற்றுமையை வலியுறுத்துவதோ குற்றமாகாது. ஆனால் விடுதலை வேட்கையினர் தாறு மாறான வழிகளில் அதனை வற்புறுத்துவதோ, ஒற்றுமை விரும்புவார் ஆணை, அடக்கு முறைகளால் அதனைத் தடுக்க முயல்வதோ தான், தமக்கும் நாட்டுக்கும் சொல்லொணாக் கேடுகளைப்பயக்கும்.

அண்மையில் இந்திய அரசியலார் கொண்டுவர விருக்கும் பிரிவினைத் தடைச் சட்டம், எதிர்காலத்தில் என்றேனும் ஒரு நாள் இந்தியா பற்பல வகையில் பிளவுண்டுபோகும் என்பதற்கே அடிப்படையாகுமன்றி, அதனைத்தடுத்து நிறுத்தும் முயற்சிக்குக் கட்டாயம் வழி வகுக்காது.

குடியரசு அமைப்பு முறையின் முழு முதல் அடிப்படைச் சிறப்பு என்னவென்றால், எல்லாக் குடிமக்களின்—அன்றிக் குடிமக்களில் ஒருசிலரின் அவ்வப்பொழுதைய உரிமைக் குரலுக்குச் செவி சாய்ப்பதே ஆகும். அவ்வுரிமைக் குரல் எழுப்பப்படுகையில் அதற்குச் சரியான வகையில் அமைவு கூறி அதனைத் தணிக்க முயல்வதே குடியரசு முறையைக் கட்டிக்காக்க விரும்புவார் செய்ய வேண்டிய செயலாம். அஃதன்றிக் குடிமக்கள் சிலரால் எழுப்பப் பெறும் உரிமை வேட்கையின் குரல் வளையை அழுத்தி நெரித்து அக்குரலெழாமல் தடுக்கும் குடியரசைவிட, தன் விருப்பம்போல் மக்களை அலைக்கழித்து அச்சுறுத்தித், தன் வலிந்த கைகளால் மெலிந்த குரலெழுப்பும் மக்களைத் தடுத்து வன்மம் புரியும் முடியரசே நூறு மடங்கு மேலாம்.

இந்தியப் பேராயக் கட்சியின் ஆளுநர், அண்டை நாட்டாரொடு எல்லைப் போரிட்டுக் கொண்டிருக்கும் இதே பொழுதில், எவ்வகையிலும் தமக்குத் தொல்லைதராத — மாறாகத் துணை புரிகின்ற ஒரு சார் மக்கள், தாம் பின்னர் எழுப்பப் போவதாகக் கூறும் விடுதலைக் குரலுக்கு அணையிட முயன்று, அவர் தம் வெறுப்புக்கும் பகைக்கும் ஆளாகின், அந்நிலை எத்துணைப் பெருந் தீங்கை விளைவிக்கும் என்று நாம் கூறற்கியலாது.

இப் பொது நிலைகளை ஒருவாறு விடுத்துப் பிரிவினைக்குரிய சிறப்பு நிலைகளை ஒரு சிறிது பார்ப்போம்.

இந்திய அரசினர் இப் பிரிவினைத் தடைச் சட்டத்தை விரைந்து கொண்டுவரும் இந்நிலைக்குத் தமிழ்நாட்டில் அன்று தொட்டிருந்து வரும் விடுதலை யுணர்வே தலையாய காரணமாக விருக்க முடியும். அண்மையில் நடந்த தேர்தலில் பெருமளவில் மக்கள் துணையைப்பெற்று மாநில அரசவையிலும், நடுவன் அரசவையிலும் ஒரு நல்லிடத்தைக் கைக்கொண்ட தென்னக விடுதலைக் கட்சி ஒன்றின் நிலை வலுத்த பின்பு, இத்தடைச் சட்டம் கொண்டுவரப் படுவதே, இதனை வலியுறுத்திக் காட்டும்.

தமிழ் நாட்டு மக்கள் ஒரு சிலர்க்கு உடன்பாடற்றவையாக இத் தென்னக விடுதலைக் கட்சிக் கொள்கைகள் இருந்தாலும், அக்கட்சிக்கு அடிப்படையான தமிழக விடுதலை யுணர்வையும், வரலாற்று உண்மையையும், எவரும் மதியாது புறக்கணித்து விடல் முடியாது. ஓரளவிற்கு அந்தக் கட்சியின் உணர்வு, தமிழர் தம் உள்ளத்துக் கனல் விட்டுக் கொண்டிருக்கும் உரிமை உணர்வே என்று கூறுவதானாலும் அது மிகையாகாது.

இவ்விடுதலை உணர்வு இன்று நேற்று ஏற்பட்டதா? அன்றி வெள்ளையரை எதிர்த்துப் பொருதிக் காலக் கோளாறுகளால் தன்னாட்சியை மறை முகமாக நிறுவிக் கொண்ட பேராயக் கட்சி யின் விடுதலை உணர்விற்குப் பின்னர் தோன்றியதா? பருக்கைச் சோற்றுக்குக் கையேந்தி, படுக்கும் பாய்க்கு உடல் சொரிந்து, பிறன் வீசி எறியும் ஒரு சில காசுகளைக் குனிந்து பொறுக்கிக் கும்பி நிறைக்கும் தன்மானமிழந்த தம்பிரான்மார்கள் ஒரு சில ரன்றி, உண்மைத் தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ் வொருவனுடைய உள்ளுணர்விலும் எழுந்ததாகும் இத் தமிழக விடுதலை வேட்கை! இதை எவராலும் அழித்துவிடல் முடியாது. தமிழ் மொழி உள்ளளவும் தமிழன் இருப்பான். தமிழன் இருக் கும் வரை, தமிழ் நாட்டுணர்வும் இருந்தே தீரும் என்பதை எவரும் மறந்து விடல் வேண்டாம்.

மொழி, இலக்கிய, பண்பாட்டு, சமய அடிப்படையில், தனக்கு ஓரகம் நடைபெறுங் காலத்து, ஒவ்வொரு தமிழனும்

எழுந்து தன் விடுதலை யுணர்வை வெளிப்படுத்தியே தீர்வான்; வெறும் சட்ட திட்டங்களாலும், அடக்கு முறைகளாலும் இதனை அடக்கி விடல் முடியாது. போலி ஒற்றுமை மணிலாக் கொட்டையின் புறத்தோலைப் போன்றது. வேட்கை யுள்ளத்தால் அக்காய் உடைத்தெறியப் படும்பொழுது மணிகள் விடுதலை பெற்றே தீரும்.

முற்றி முதிர்ந்து வளர்ந்து பரந்து சிறந்த ஓரினத்தின் ஆணி வேரை ஒருவராலும் அவ்வளவு எளிதில் அறுத்தெறிந்து விடல் முடியாது. தமிழ் மொழி விடுதலை, தமிழ் இலக்கியப் பண்பாட்டு விடுதலை, தமிழர் சமய விடுதலை என்பவற்றிற்குத் தீங்கு நேருங்கால் நாட்டு விடுதலை முழக்கம் எம்மருங்கும் ஒலித்தே தீரும். அக்கால் விடுதலை முழக்கமிடும் இத்தென்னகக் கட்சியொடு ஒவ்வொரு தமிழனும் ஒன்றித் தன்னை முழுமைப் படுத்திக் கொள்ள நேரினும் நேரும் என்று அரசியலார்க்கு எச்சரித்துக் கூறுகின்றோம். சாவைவிட அடக்கி யொடுக்கப் படுந் தன்மை இனிப்பதன்று. இந்திய நாட்டின் ஒற்றுமை உணர்வை விடப் பன்னூறுயிர மடங்கு உயர்ந்து வலிந்ததாகும் தமிழக விடுதலை யுணர்வு. அதைச் சட்டத்தால் அடக்குதல் சிறும்புயலை மீன் வலை கொண்டு மறிக்கும் மடமைச் செயல் போன்றது. குடியரசுக் கொள்கைக்கே மாறான இச்சட்டம் நன்மை பயப்பதன்று. மேலும் மேலும் விடுதலை உள்ளத்தைக் கிண்டிக் கிளறுவதாகும். **'துஞ்சு புலி இடறிய சிதடன்'** போல ஆளுநர் ஆகிவிடக் கூடாது என்பதே நாம் விரும்புவதாகும்.

மாணவ உறுப்பினர்கட்கு

தென்மொழிக்கு உறுப்பினர்களாக விருக்கின்ற கல்லூரி மாணவர்களும், பள்ளி ஆசிரியர்களும் அண்மையில் வரவிருக்கும் கோடை விடுமுறையில் தம் தம் ஊர்கட்குச் செல்வார்களாதலின், அவர் தமக்கு அடுத்துவரும் இதழ்கள் தவறுமற் கிடைக்கும் பொருட்டு, அத்தகையோர் முன்கூட்டியே அமைச்சர்க்கு எழுதி விடுமுறை முகவரிகளை அறிவிக்க வேண்டுகின்றோம். விடுமுறை நாட்களை வீணே கழிக்காது, தென்மொழிக்குப் பல உறுப்பினர்களை மேலுஞ் சேர்த்துதவ அவர்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். — ஆசிரியர்.



மக்களவை

தென்மொழிக்கு இறை வேண்டல்.

பன்மொழி களிலும் தலைசிறந் தொளிரப்
பாவலர் நாவலர் போற்றத்
தொன்மொழி யாகத் தமிழினைத் தந்த
சுந்தர! முருகவேள் எந்தாய்!
பொன் மொழிச் சிறப்பை எங்கணும் பரப்பப்
புகழுடன் தோன்றுமிவ் விதழாம்
'தென்மொழி' சிறக்க அருள்புரி தேவ
தேவனே! ஞானதே சிகனே!

— **ம. வெ. நாராயணன்,**
சித்தாந்த சைவ நிலையம்,
உலகன்பட்டி அஞ்சல்.

ஃ ஃ ஃ

வழிகாட்டி!

தென்மொழி தனக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைந் தெறிந்துவிட்டு, எழில் நடை போடுகின்றது என்பதையறிந்து உளமாற மகிழும் எண்ணற்றோரில் நானும் ஒருவன். என் போன்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டி தென் மொழியே! ...... கதைகளைக் குறைத்துக் கொண்டு கருத்துக் குவியலாக விளங்கட்டும்!... இதழ் காணத் துடிக்கும்

— **குரு. சண்முகம்,**
உதயகுடி அஞ்சல்.

ஃ ஃ ஃ

இருளகற்றும் ஒளி விளக்கம்!

பல இடர்ப்பாடுகளைக் கடந்து, இனிமேலும் கடக்க வேண்டிய 'தென்மொழி' மீண்டும் முகிழ்த்தலர்வதை உவகை பொங்க வரவேற்கின்றோம்; வாழ்த்துகின்றோம். தென்மொழியை எங்கள் இல்லங்களில் இருளகற்ற வந்த ஒளி விளக்கென எண்ணிப் போற்றி வளர்க்கும் உணர்வு எங்கட்கிருக்கின்றன. எங்கள் உயிரினுமினிய தென்மொழியை இனி நிலைப்படுத்த என்றுந் துணை நிற்போம்.

— பாவாணர் **தமிழ் மன்றம்,**
ஈப்போ, மலேயா.

திருமணத் தாம்பூலம்!

... திருமணங்களில் 'தாம்பூலம்' எனத் தேங்காய்ப் பழந் தருவதற்குப் பதில் 'தென்மொழி' 100, 200 படிகளை வாங்கி வழங்குமாறு, என் நண்பர்களை நான் எப்பொழுதும் வேண்டிக் கொண்டதுண்டு ...... தென்மொழி இலக்கக் கணக்காக விற்க வேண்டும் என்பதே என் குறிக்கோள்!

முகவை. ஆடல்வல்லான்,
மதுரை-3.

ஃ ஃ ஃ

தென்மொழிக்காக நான்...!

மீண்டுந் தென்மொழி வெளிவருவதைக் குறித்து மட்டிலா மகிழ்ச்சி! தென்மொழி சீருஞ் சிறப்புடனும் வாழ்கவென்று என் உளமுவந்து வாழ்த்துகின்றேன். 'எனக்காகத் தென்மொழி! தென்மொழிக்காக நான்' என்றே நீண்ட நாட்களாக எண்ணி வருகின்றேன். தீயவரிடை தூயவர் வாழ்வதரிது. அதுபோல் தேன் சிந்திய **தென்மொழி,** இத்தனை நாட்கள் வராமற்போனது நம் ஊழ்வினையே!

— ந. முனிசாமி,
பெங்களூர்-16.

ஃ ஃ ஃ

ஈன்ற தாயினும் பெரிதுவகை...!

கழகக் காலத் தமிழகத்திலிருந்து வெளியிடப்பெற்ற இதழ் போல் வெளிவந்து கொண்டிருந்த 'தென்மொழி' மீண்டும் வெளிவருவது கண்டு, ஈன்ற தாயினும் பெரிதுவகை உற்றேன். என் நல்வாழ்த்துகள்!

ஆ. துரைக்கண்ணு,
கோவை-5.

ஃ ஃ ஃ

தனித் தமிழில் எல்லாம் எழுத முடியும்...!

நான் எதிர்பார்த்ததைவிட மிகமிகச் சிறப்பாகத் தென்மொழி வெளிவந்துள்ளது கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன். தென்மொழியின் ஒவ்வொரு பக்கமும் ஓராயிரம் பெறும். தமிழர் என்று சொல்லும் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய அரும் பெட்டகம்! தனித்தமிழில் எல்லாம் எழுதமுடியும் என்பதற்கோர் எடுத்துக்காட்டு. உயர்ந்த தாள். எல்லாச் சிறப்பும் ஒருங்கு அமைந்துள்ளது கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். நடுவில் ஈராண்டு நிறுத்தப்பட்டாலும் முன்னைவிட அதன் சிறப்பு பன் மடங்கு உயர்ந்துள்ளது.

— க. பழனியப்பன்,
பொன்மலை.

கழகமெல்லாம் சூதாடுமிடமா?

'கழகம்' என்பது சிறப்பாகவும் பெரும்பான்மையாகவும் கற்றோர் கூட்டத்தையே குறிக்குமேனும், சிறுபான்மை சூதாடு மிடத்தையும் குறிக்குமாறு இலக்கியத்தில் ஆளப்பட்டிருப்ப தால், இவ்விரு பொருள்களுள் எது சிறந்தது என்னும் ஐயமும், 'கழகம்' சூதாடுமிடத்தைக் குறித்ததெவ்வாறு என்னும் கலக்க மும், சிலர்க்குத் தோன்றியுள்ளன.

கழகம் என்னும் சொல்லின் வேரும் வரலாறும் தெரியின், இவ்வையமும் கலக்கமும் முற்றும் நீங்கிவிடும்.

குல் — குல — குலவு, குலவுதல் = கூடுதல்.
குல — கல.
கல — கலவி.
கல — கலவை, கலப்பு — கலம்பு —
கலம்பம் — கதம்பம்.
கலம்பு — கலம்பகம்.
கல — கலங்கு — கலக்கு — கலக்கம்.
கல — கலகம், கலாம், கலாபம், கலாபனை.

இருவர் அல்லது இருகட்சியார் கலந்தே பொருவதால், கலத்தற்கருத்திற் போர்க்கருத்துத் தோன்றிற்று, கை கலத்தல் என்னும் வழக்கையும், பொரு, சமர் என்னும் சொற்களின் வேர்ப் பொருளையும் நோக்குக.

மேற்காட்டிய சொற்றிரிவுப் பட்டியினின்று, கலத்தற் சொற்கு, இருபாற் கூட்டம், கலப்பு, கலக்கம், கலகம் என்னும்

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

நாற்பொருள்கள் தோன்றியுள்ளமை காண்க. நீரும் மண்ணும் போலப் பல பொருள்கள் அல்லது கருத்துக்கள் கலப்பதே கலக்கம்.

குல் — குள் — கள். கள்ளுதல் = கூடுதல், பொருந்துதல் ஒத்தல்.

கள்—களம் = ஏர்க்களமும் போர்க்களமும் போலப் பலர் கூடுமிடம்.

களம் — களன் = அவைக்களம்.

களன் — கழனி = ஏர்க்களம் உள்ள வயல்.

களம் — களர் = அவை.

களர் — களரி = அவை, கல்வி நாடகம் மல் வில் பயிலும் அரங்கு, வழக்கு மன்றம், தொழில் செய்யும் இடம்.

கள்ளம் = போல.

"கள்ள மதிப்ப வெல்ல வீழ" (தொல். பொ. 289).

குள் — குழு — குழம்பு — குழப்பு — குழப்பம்.

குழவி = திரண்ட அரை கல்.

கூடுதற் கருத்தில் திரட்சிக் கருத்துத் தோன்றும், "சேரே திரட்சி" என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க. (846).

குழு — குழூஉ.
குழு — குழாம்.
குழு — குழும்பு.
குழு — குழுமு — குழுவு, குழுமு — குழுமல்,

குழுமம், குழுவு — குழுவல், குழுமுதல் = கூடுதல், குழுவுதல் = கூடுதல், திரளுநல்.
குழுமு — கழுமு — கழுமல் = மயக்கம், நிறைவு, மிகுதி.

குழு — கெழு — கெழுமு — கெழுவு.
கெழுமுதல் = பொருந்துதல், கெழுவுதல் = பொருந்துதல், மயங்குதல், கெழுவு = நட்பு, 'கெழுவி' ஓர் உவமவுருபு
கெழு — கெழி = நட்பு.
குழு — குழை — திரண்ட காதணி.

குழு — (குழகு) — கழகு — கழகம் = ஓலக்கம் (Durbar), புலவரவை, கலை பயிலிடம், படைக்கலம், மல் பயிலிடம், சூதாடுமிடம்.

குள் — (கூள்) — கூடு.

கழகம் என்னும் சொல், கூடுதல் என்னும் பொருள்கொண்ட குழு என்னும் வேரடியாகப் பிறந்திருத்தலால், பொதுவாகக் கூட்டம் என்றே பொருள் படுவதாகும். அது, முதற்கண், சிறந்த கூட்டமாகிய புலவரவைக்குப் பெயராய் வழங்கிற்று.

''கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ''.

என்னும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணச் செய்யுளில், 'கழகம்' புலவரவையைக் குறித்தது. சங்கம் என்னும் வட சொற்கு நேர் தென்சொல் கழகம் என்பதே.

பழம் பாண்டி நாட்டு முத்தமிழ்க் கழகங்களும் தமக்கு முந்திய தமிழிலக்கியத்தை ஆராய்ந்து வந்ததினால், கற்றோர் பயிலும் இடத்தைக்குறித்த கழகம் என்னும்சொல், நாளடைவில், கற்போர் பயிலும் இடத்தையும் குறிக்கத் தலைப்பட்டது. ''அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையென்ப.'', ''அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப.'', ''அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை யென்ப.'', என்று இறையனரகப் பொருளுரை, முறையே முத்தமிழ்க் கழகங்களையும் பற்றிக் கூறுதல் காண்க. இதனால், இளைஞர் கல்வி பயிலுமிடத்தை,

''கந்தனை யனையவர் கலைதெரி கழகம்''

என்றார் கம்பர் (கம்பரா. நாட்டுப். 48). இனி, ஈண்டைக் கழகம் என்னும் சொற்கு, விற்கலை மற்கலை முதலிய போர்த் துறை பயிலும் இடம் எனவும் பொருளுரைப்பர். அதுவே கம்பர் கருத்தாயின் போர்க்கலையையும் கல்வித் துறைகளுள் ஒன்றாக அடக்கிக்கொள்க. திவாகரம், படைக்கலம் மற்போர் முதலியன பயிலும் இடத்தையும் கழகம் எனக் குறிக்கும்.

ஏர்க்களத்திலும் அவைக்களத்திலும்போல் போர்க்களத்திலும் மக்கள் கூடுவதால், களம் என்னும் சொல் அம் மூன்றிடத்தையுஞ் குறித்ததென முன்னர்க்கண்டோம். சூதாடுதற்கும் மக்கள் கூடுவதாலும், சூதும் ஒரு வகைப் போராதலாலும் கழகம் என்னும் சொல் மூன்றுவதாக அல்லது இறுதியாகச் சூதாடுமிடத்தையும் குறித்தது. சூதும் ஒரு வகைப் போர் என்பதைச் சூது பொருதல் என்னும் வழக்கினாலும், சூது போர்ச் சருக்கம் என்னும் வில்லி பாரதச் சருக்கப் பெயராலும், உத்தியாலும், அறியலாம். வேத்தவையிலுள்ளாரெல்லாம் ஒவ்வொரு துறையில் தேர்ச்சி பெற்றிருப்பராதலின், ஓலக்கமும் புலவரவையின் அடங்கும். ஆகவே, புலவரவை, கல்வி பயிலிடம், சூதாடுமிடம் ஆகிய மூவேறு பொருளைக் கழகம் என்னும் சொல் குறிக்கும் என்பது தெளிவாம்.

''பழகிய செல்வமும் பண்புக் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.''

என்னுங் குறளில் (937), சூதாடுமிடத்தையும்,

''கழகத் தியலுங் கவற்றி னிலையும்''

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைத் தொடரில் (358), சூதாட்டையும், கழகம் என்னும் சொற் குறித்தது.

இங்ஙனங் குறிப்பினும் இது அருகிய வழக்கே, இற்றை உலக வழக்கிலும், நாட்டாண்மைக் கழகம், செந்தமிழ்க் கழகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மாணவர் கழகம், எனக் கழகம் என்னும் சொல் சூதாடுகளமல்லாத பிற களரிகளையே குறித்தல் காண்க.

குழு என்னும் வேரினின்றே குழாம், குழுமம் முதலிய பல்வேறு தொகுதிப் பெயர்கள் தோன்றியிருப்பினும், அவையாவும் பருப்பொருளிலன்றி நுண்பொருளில் ஒத்தனவல்ல.

குழு = சிறுகூட்டம் (Committee).

குழூஉ = மறைபொருட் குறியீடு வழங்கும் தொழிற் குலம் அல்லது வகுப்பு.

குழாம் = குழுவினும் சற்றுப் பெரிய கூட்டம் (Party).

கோஷ்டி என்னும் வடசொற்கு நேரான தென்சொல் குழாம்.

பஜனைக் கோஷ்டி என்பதைத் திருப்பாட்டுக்குழாம் என்னலாம்.

குழுமல், குழுவல் = குழாத்தினும் பெரிய கூட்டம் (Gathering).

குழுமம் = வணிகர் சங்கமும் தொழிலாளிகள் சங்கமும் போன்ற கூட்டம் (Guild).

குழும்பு = யானைநிரை தோழமைக் கூட்டம் (Herd, Company). "களிற்றுக் குழும்பின்" (மதுரைக். 24).

கழகம் = சங்கம் (Society Association).

ஆகவே, குழு, குழூஉ, குழாம், குழுமம், என்பன முறையே ஒன்றினொன்று பெரிய தொகுதிகளாம். கழகம் என்பது உயர்திணைக்கே யுரியதாய்ப் பெரும்பாலும் கல்விபற்றியதும் நிலையானதும் குழுமத்திற்குச் சமமானதுமான கூட்டத்தையே குறிக்கும். இதனாலேயே, பண்டைத் தமிழ்ச் சங்கத்தைக் கழகம் என்றார் பரஞ்சோதி முனிவர். தலைக்கழகப் புலவர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர்; இடைக்கழகப் புலவர் ஐம்பத்தொன்பதின்மர்; கடைக் கழகப் புலவர் நாற்பத் தொன்பதின்மர். ஆகவே, கழகம் என்பது சிறு குழுவைக் குறிப்பதன்று.

இனி சூதாடு கருவிக்குக் கழங்கு, கழங்கம் எனப் பெயரிருப்பதால், கழங்கம் அல்லது கழங்ககம் என்னுஞ் சொல் கழகம் எனத் தொக்குச் சூதாடுமிடத்தைக் குறித்ததோவென ஐயுறவும் இடமுண்டு. ஆயினும், ஆய்ந்து நோக்குவார்க்கு, மேற்காட்டிய வரலாறே உண்மையான தென்பது புலனாம்.

இதுகாறுங் கூறியவற்றால், கழகம் என்பது குழு என்னும் வேரடியாய்ப் பிறந்ததென்றும், கூட்டம் அல்லது கூடுமிடம் என்பதையே அடிப்படைப் பொருளாகக் கொண்டதென்றும், முதற்கண் கற்றோரவையை அல்லது கற்போர் கூட்டத்தைக் குறித்தே பின்னர்ச் சூதாடுமிடத்தைக் குறித்ததென்றும், சங்கம் என்னும் வட சொற் பொருளில் தொன்று தொட்டு வழங்கிய தூய பழந்தமிழ்ச் சொல்லென்றும், பண்டையிலக்கியம் முற்றும் இறந்துபட்ட இக்காலத்தில் திருக்குறளைக் கொண்டு சொற்பொருள் வரிசையைக் காணமுடியாதென்றும், சொல்லாராய்ச்சியின் துணையினாலேயே அதைத் துணிதல் கூடுமென்றும், தெற்றெனத் தெரிந்து கொள்க.

*

குடிசெய் நன்மகன்.

(உந்து வண்டியிற் செல்கையில் அழுக்குடையும் வெயர்வை மேனியுமாய் வந்த உழவர் ஒருவரை, வண்டியில் இருந்தார் அருவருப்புற்று, அவர்க்கு இடந்தரத் தயங்கிய ஞான்றை அருகழைத்து இடமளித்து நெஞ்சொடு கூறியது).

பழங்குடி மகனே, பழங்குடி மகனே,
உழுதொழில் ஆற்றி உலகுபுரந் தோம்பினும்
இழிகுலம் ஆகிய பழங்குடி மகனே!
வாழிய! வந்தென் அருகில் அமர்க.
அழுக்குடல், கந்தல் அரைத்துணி கண்டாங்
கிழுக்குற் றனர்போல் எரிமுகந் திருப்பி நிற்
கிடந் தரத் தயங்குவார்க் குடைவதும் என்கொல்!
கிடந்தனர் சிறியர்! எற் கிட்டிவந் தமர்க.
வெள்ளை ஆடையும் விரைசெறி மேனியும்
எண்ணெய்ப் பூச்சும் இருப்பினும் பலரீங்(கு)
உள்ளம் அழுகி உழையெலாம் நாறுங்
கள்ளர், களியர், காமவெங் கயவர்;
நின்னினுங் கோடி நிலை கீ ழாவர்!
அன்னவர்த் தொடலும் அருவருக் கின்றேன்.
நின்னைஎன் இருகை புல்லவும் விழைவேன்;
ஒட்டிவந் தமர்க; உடல் உராய்ந் திடுக;
கட்டிய கந்தல்என் துணி கறை செய்க;
மேலுறும் வெயர்வை என் மேனியை நனைக்க;
தோள்நனி தொடுக; தொடுகநம் உளமே!
உழைப்பின் செல்வம்நீ! இளைத்தவர்க் குறுதிநீ!
தமிழ்க்குடி மகன்நீ! தகவுயர்ந் தவன்நீ!
தலைமுதல் நாளாய்த் தன்பயன் மறந்து
பிறர்பயன் கருதிப் பீடழிந் திடுநின்
உள்நிறை வெனக்குறு மாயின்
மன்பதைத் தொண்டில் மலைவது மிலனே!

ம. இலெனின் தங்கப்பா எம்.ஏ; பி.டி.

வரலாறு

அருள் நிறை பெருமாட்டி.

(சிறை வாழ்வைச் சீர்திருத்திய, எலிசபெத்து
பிரை பெருமாட்டியார் வரலாறு.)

(1780 – 1845)

மக்கள் தொண்டே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த உலகப் பெருமக்கள் வரிசையில் பெண்பாலார்க்குஞ் சிறந்த இடமுண்டு. அத்தகு பெண்பாலாருள் ஒருவரே பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் தோன்றிய **எலிசபெத்து பிரை** அம்மையார் ஆவர்.

பிறந்த ஊர் ''ஏர்ல்ஃகாம் ஃகால்'' (Earl harm Hall) என்னும் சிற்றூர். தந்தையார் குர்னி (Gurney) என்பார். உடன் பிறந்தார் ஆணும் பெண்ணுமாகப் பதினொருவர். கிறித்துவ சமயத்தின் ஓர் உட்பிரிவாகிய குவேக்க சமயத்தார் அக்குடும்பத்தார். பொருள் வளமிக்க குடும்பம். குழந்தைகள் ஆடல் பாடல்களிலும் களியாட்டங்களிலுமே வளர்ந்து வந்தனர்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள்தான் அந்தப் புதுமை நிகழ்ந்தது. உடன் பிறந்தாரெல்லாம் ஆடி ஓடி விளையாடியிருப்ப எலிசபெத்து மட்டும் எதிலும் சேராமல் தனித்தமர்ந்து கொண்டிருந்தாள். விளையாட்டில் கலந்து கொள்ளுமாறு ஒவ்வொருவராக

''இலெனின்''

வந்து அழைத்தும் அவள் இணங்கினாளில்லை. அப்போது அவள் பதினேழாண்டுச் சிறுமிதான். நேற்றுத்தான் அவள் மரங்களில் ஏறிக் குதித்தாள். ஆற்றோரத்தில் ஆடித்திரிந்தாள். தவளைக் குஞ்சுகள் நீந்துதலைக் கண்டு இன்பமுற்றாள். அவள் உள்ளத்தில் பெரியதொரு மாற்றம் — தன் எண்ணம் இனி ஆட்டங்களில் ஈடுபடாது என உணர்ந்தாள்.

ஏன் இந்த மாறுதல்? வில்லியம் சாவ்ரே என்ற அமெரிக்கச் சமயப் பெரியாரின் பேச்சினை முந்திய நாள் கேட்டாள். அவ்வளவுதான். மக்கள் தொண்டுபற்றிய எண்ணம் அவள் உளத்தில் ஆழப் படிந்துவிட்டது. இனித் தொண்டே தன் வாழ்க்கை என்று நினைத்தாள். உடன் பிறந்தாரின் எள்ளலும் ஏசலும் அவளை மாற்றமுடியவில்லை. அவள் உள்ளம் உறுதி வாய்ந்தது. அரை குறைத் தொண்டில் அவட்கு நம்பிக்கையில்லை. வாழ்க்கை முழுவதையும் தொண்டுக்கு ஒப்படைத்து விட முடிவுகட்டினாள்.

தந்தை பெருஞ் செல்வராக இருப்பின் தான் என்ன? வாழ்க்கை ஆடல் பாடல் நாட்டியங்களிலேயே பழகிப்போயிருப்பின்தான் என்ன? அனைத்தையும் துறக்கத்தான் வேண்டும். துன்பமடைந்தார்க்குத் தோழமை பூண்டு வாழ உறுதி பிறந்து விட்டது.

உலக வாழ்வு எப்படியிருக்கும் என்று நன்கு தெரியாமலேயே அதைத் துறப்பதுவும் அவட்குப் பொருந்தாததாகப் பட்டது. தந்தையின் ஒப்புதலோடு அவள் இலண்டன் மாநகரஞ் சென்றாள். மாந்தர் பாராட்டும் இன்பத்தின் முழு அளவும் எத்தகையது என்று ஆய்வதற்கு விரும்பினாள். நாடகங்கட்குங் கூத்துகட்குஞ் சென்றாள். பொதுமக்களின் பொழுது போக்கின்பங்களெல்லாம் தீமைகளையே வளர்க்கும் என்ற எண்ணம் உறுதிப்பட்டது. தன் திட்டத்தில் முன்னினும் பன் மடங்கு உறுதியுடன் திரும்பினாள்.

எளிமையே வாழ்வாயிற்று. நாட்டியம், இசை, அணிகலன்கள், பகட்டுடைகள் அனைத்தையும் துறந்தாள். யாதானுமொரு பொதுப்பணியில் ஈடுபட வழி தேடினாள்.

குழந்தைகட்குக் கல்வி கற்பிப்பது நல்ல பணியாகப் பட்டது. எழுபது குழந்தைகளைச் சேர்த்துக் கிழமையில் இரண்டு நாட்கள் அவர்க்குக் கல்வி கற்பித்தாள். ஞாயிற்றுக் கிழமைகளில் வழிபாடும் நடத்தப் பெற்றது.

தந்தையாகிய குர்னி, எளிய வாழ்வே நாடும் தோழமைக் குழு (கிறித்துவ சமயத்தினுள் எளிமைநாடும் Quaker-Society என்ற ஓர் உட்குழு) வினைச் சேர்ந்தவராக இருப்பினும், எலிச பெத்தின் கடுநோன்பு வாழ்க்கையை அவர் விரும்பவில்லை. குடும்பத்தில் மனத்தாங்கல் சற்று ஏற்பட்டது. ஓர் அழகிய இளமங்கை தன் வாழ்வை இவ்வாறு வீணாக்குவது தவறு என்றார் தந்தை. எனவே மகட்கு மணம் முடிக்க விரும்பினார். எலிசபெத்தின் பகட்டற்ற அழகினையும், ஆழ்ந்த இயல்பையும் விரும்பிய சோசப் பிரை என்பாரைத் தன் இல்லத்துக் கழைத் தார். அவரும் தோழமைக் குழுவினரே. தான் மணந்து கொள்வது சரியாகுமோ என எலிசபெத்தின் உள்ளம் தத்தளித் தது. வீட்டில் வற்புறுத்தலோ மிகுதியாயிற்று. சோசப் பிரையும் அவளின் தொண்டு வாழ்வுக்குத் தான் குறுக்காக நிற்பதில்லை என உறுதியளித்தார். பின்னர், அவரை எலிசபெத் அமைதி யான முறையில் ஏற்றுக் கொண்டார்.

1800-ஆம் ஆண்டு மணம் நிகழ்ந்தது. அப்போது எலிச பெத்துக்கு இருபது ஆண்டு. இலண்டனிலுள்ள தூய மில் ரெட் வளாகத்தில் (St. Mildred's Court) வாழத் தொடங்கினர். கணவர் செல்வர்தாம். எனினும் பிரை அம்மையார் பயனற்ற அணிகலன்களையும், உயர்ந்த உணவு வகைகளையும் விரும்பிலர். எனினும் சமய வழக்கப்படி விருந்தோம்பலுக்கு மட்டும் வீட்டிற் குறைவில்லை.

விரைவிற் குழந்தைகள் பிறந்தன. எனினும் பொதுப்பணி தொடர்ந்தது. நகர ஏழைமக்களை அடிக்கடி சென்று பார்வை யிட்டார். ஐலிங்டன் வறியர் விடுதியின் பார்வையாளராகவும் அமர்த்தப் பெற்றார். இவையெல்லாம் அம்மையார்க்கு நிறை வளிக்கவில்லை.

"இறைவனின் ஊக்கமிகுந்த தொண்டர் படையினில் ஒருவராகவிருப்பதை விடுத்து, இவ்வாறு குடும்பக் கவலைகளில் அல்லற்படுகின்றேனே" என்று அவர் ஒரு முறை எழுதினாராம்.

1811-இல் ஏழை மக்கட்குப் பள்ளிகளையும், உணவு உடை மருந்து வழங்குமிடங்களையும் அவர் அமைத்தார். மாற்றுப் புகுத்தும் முறை (Vaccination) யையுங் கற்றுக்கொண்டு பணி புரிந்தார்.

கூட்டங்களிற் பேசத் தலைப்பட்டார். தொடக்க நிலையில் அவைக் கூச்சம் மிகுந்திருந்தது. தன் பேச்சாற்றலே அக்காலச் சீர்திருத்தங்கட்கெல்லாம் தலையாய ஒரு சீர்திருத்தத்தை வெற்றியோடாற்றுவதில் பின்னர் தனக்குச் சிறந்த கருவியாகப்போகின்ற தென்பதை அவர் அறிந்தாரில்லை.

சிறைப்பட்டோர் வாழ்க்கை அவர் நோக்கத்தை ஈர்த்தது. அவர்க்கு முன்பே சான் ஓவார்டு (John Howard) என்பார் அப்பணியைத் துவக்கி வைத்திருந்தார் அதனை ஏற்று வெற்றியோடு முடித்த பெருஞ்செயல் பிரை அம்மையாரையே சாரும்.

அக்காலத்தில் சிறைப்பட்டார் தம் துன்பம் சிறிதன்று. இக்காலத்து விலங்குகளையும் அவ்வாறு நடத்துவாரிலர். பசியாலும் நோயாலும் புழுக்கறையில் நெருக்குண்டமையாலும் பலர் மாய்ந்தனர். அயர்லாந்துச் சிறை யொன்றில் நெருப்புப் பற்றிய போது கவலைப்படுவாரின்மையால் ஐம்பத்துநால்வர் அழிந்தனர். ஆடவர், பெண்டிர், கொலைஞர், பித்தர், கடன்பட்டார், முடிச்சு அவிழ்ப்பார், குழந்தைகள் அனைவரும் இருட்டு நிறைந்த நில வறைகளில் தள்ளப்பட்டனர். அவர்கட்குப் படுக்கைகள் கிடையா. அறைகளில் வெளிச்சமும் நுழையாது. பணம் தந்து குடிவகைகளைப்பெற வாய்ப்பிருந்தது. அளவு கடந்து குடிப்பதற்கும் தடை கிடையாது. பலர் கொலைத் தண்டம் பெற்றனர். பலகணிவழியாய்க் குச்சியை நீட்டிச் சிறியதொரு பொருளைத் திருடிய குழந்தை ஒன்றுக்கு 1833-ஆம் ஆண்டில் கொலைத் தண்டம் அளிக்கப்பட்டது.

1818-இல் பிரை அம்மையார் முதன் முதற் புதுவாயிற் (New gate Prison) சிறையினைப் பார்வையிட்டபொழுது, முந்நூறு மாதர் தத்தம் குழந்தைகளுடன் தரையிற்கிடந்து உருண்டு கொண்டிருப்பதைக் கண்டார். சொல்ல முடியாத இழிவு அங்கு நிலவியது. ஏசலிலும், பூசலிலும் வரம்பு மீறிய செயல்களிலும் அம்மாதர் தம்மை மறந்து கிடந்தனர். காவலாளர்களைப் பணத்தால் மயக்கிக் குடிவகைகளைப் பெற்றனர் பலர்.

பிரை அம்மையாரின் உள்ளம், ஆங்குள்ள மாதரின் குழந்தைகட்காக இரங்கியது. இளமையில் இத்தகு சூழலில் வாழ்ந்தோர் வருங்காலத்தில் என்ன ஆவர்?

மறை நூலிலிருந்து ஏற்றதொரு பகுதியை அவர்க்குப் படித்துக் காட்டினார். குழந்தைகளின் கல்வியை எண்ணித் தன்னோடு ஒத்துழைக்கும்படி வேண்டினார்.

விளைவு பயன் தருவதாக இருந்தது. ஆயினும் குடும்பத் தொல்லைகளால் தொடர்ந்து பணியாற்ற முடியாமற் போயிற்று. அம்மையார்க்கு மற்றொரு குழந்தை பிறந்தது. நெருங்கிய உறவினர் இருவர் மறைய நேர்ந்தது. நோயும் துயரும் மிகுந்தன. ஒன்பது பேருள்ள குடும்பத்தில் கவலையும் துயரும் இல்லாமற் போமா?

அவர்தம் உள்ளத்தே அமைதியில்லை. குடும்பக் கவலையை ஒதுக்கிவிட்டு, வாழ்வைத் தொண்டில் ஈடுபடுத்த ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டுமே என்று ஏங்கினார். நல்ல வேளையாக அவர்தம் உடன் பிறந்தாருள் ஒருத்தி, பெண் குழந்தைகளைத் தம்மோடு அழைத்துச் செல்ல முன்வந்தார். சிறுவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். அம்மையார் சிறைநோக்கிச் சென்றார். சிறைப்பட்டாருள் ஒரு பெண்ணையே துணையாளாகக்கொண்டு சிறைப்பட்டார் தம் குழந்தைகட்கு ஒரு பள்ளியைத் தொடங்கினார். சிறை மேலாளர் இதைத் தடுக்கவில்லையேனும் இம்முயற்சி பயன்தருமென நம்பினாரில்லை. சிறைக்குள் நுழைய அவர்க்கே அச்சம். சிறை மாதர் அவ்வளவுக்கு நிலையிழந்து கிடந்தனர். அந்நிலையிழிவுக்கு மெய்ப் பொருட்டினை அறிந்த அம்மையார் சிறிதும் அஞ்சினாரிலர்.

முதன் முதல் அவர் சிறைக்குள் நுழைந்தபோது சீறும் புலியாகக் கிடந்த அம்மாதர் திகைப்பால் பின் வாங்கினர். அமைதியாகத் தங்கள் நடுவில் துணிந்து நடந்துவரும் மாதினை அவர்கள் வாய் பிளப்ப விழி பிதுங்க உற்று நோக்கினர். மறு நொடி இரையினை மொய்க்கும் விலங்குகள்போல் பொருள் நசை மிக்க கீழானவேட்கையுடன் அவரைச்சூழ்ந்து நெருங்கலாயினர்.

ஆடையோ எளியது. கைப்பற்றிக் கொள்வதற்கு அதில் எதுவுமில்லை. அவர் அணிந்திருந்த ஒரே ஒரு சிறு பொன் சங்கிலியின்மீது அனைவர் கண்களும் பாய்ந்தன. இடர் நெருங்கிக்கொண்டிருந்தது. அம்மையார் சிறிதேனும் அச்சம் காட்டியிருப்பினும், அல்லது அவர் தம்மைப் புண்படுத்துமாறு ஒரு சிறு சொற் கூறியிருப்பினும், அனைவரும் அவர்மேல் விழுந்து குதறியிருப்பர். அம்மையார் அங்கும் இங்கும் நோக்கினுர். அவர் தம் நம்பிக்கையை எவ்வாறு பெறுவது என்று எண்ணினுர்.

ஒரு மூலையில் கிழவியொருத்தி குடித்துக்கொண்டு உளறிக் கொண்டிருந்தாள். மற்ருெரு பக்கம் இரு மாதர் கட்டிப் புரண்டு சண்டையிட்டனர். ஒருத்தி வைக்கோலிற் படுத்து நோயாற் புலம்பிக் கொண்டிருந்தாள். மற்ருெரு பக்கம், இரண்டு பெண்கள் இறந்த குழந்தையொன்றின் கந்தலாடையைக் கழற்றிக் கொண்டிருந்தனர். அருகில் நாலாண்டுக் குழந்தையொன்று ஆடையின்றி நின்று கொண்டிருந்தது. பிரை அம்மையார் விரைந்து சென்று அந்தக் குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டார்.

அனைவரையும் நோக்கித் திரும்பி, "உங்களில் பலர் தாய்மார்கள். நானும் குழந்தைகளைப் பெற்றிருக்கிறேன். இந்த இளங் குழந்தைகளின் நன்மைக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டாமா? அவர்களும் உங்களைப் போலவே குற்றவாளிகளாக வளர விரும்புகிறீர்களா? அவர்கள் திருடராகவும், தீயவராகவும் ஆக வேண்டுமா?" என்று கேட்டார்.

அம்மாதர் தம் உளத்தில் பாழ்பட்டுப் போகாதிருந்த ஒரே உணர்வு தாய்மை உணர்வுதான். அவ்வுணர்வைத் தொட்ட

வுடனேயே அவர்தம் தீயதன்மைகளெல்லாம் ஒடுங்கிப்போயின. தாங்கள் சீர்குலைந்து போனபோதிலும் தங்கள் குழந்தை கட்காவது நல்லவழி பிறக்க வாய்ப்புத் தோன்றியிருப்பதை உணர்ந்தனர்.

விம்மி அழுதுகொண்டே அம்மையாரைச் சுற்றி வீழ்ந்து வணங்கினர். குழந்தைகளை அவரருகே அழைத்து வந்தனர். தாங்கள் பட்ட ஆறாத் துயரங்களையும், கொடுமைகளையும், ஏமாற்றங்களையும், ஒவ்வொன்றாகக் கூறத் தொடங்கினர். அவையெல்லாம் ஒரு பெருந் துன்பப் பாடலுக்குப் பொருளாகக் கூடியவை. ஆனால் அம்மையாரின் எளிய கற்பனையற்ற உள்ளம் அவர்தம் துன்பத்தில் அழுந்திவிடாமல் அவர்களைத் திருத்தும் வழியினையே நாடியது. இவ்வாறு இருளடைந்த சிறையில் ஒளிக்கீற்றுத் தோன்றியது. விரைவில் அது சீர்திருத்தப் பேரொளி வெள்ளமாக மாறலாயிற்று.

பன்னிரண்டு மாதர் கொண்ட ஒரு குழுவுடன் அம்மையார் பணிபுரியத் தொடங்கினர். மாதர் சிறைப் பகுதிக்கே நோக்கம் முழுவதும் திருப்பப் பெற்றது.

தாய்மாரின் சீரழிவு குழந்தைகளைத் தொற்றாமலிருக்கக் குழந்தைகள் அவரிடமிருந்து பிரிக்கப் பெற்றன. தொண்டர்கள் சிறையிலேயே வாழ்ந்தனர் எனலாம். "கேடு கெட்டுச் சீரழிந்த இந்த முரட்டுப் பெண்களைச் சீர்திருத்தவே முடியாது. அதிலும் ஆள்வன்மையும், தண்டமளிக்குந் திறனுமில்லாத ஒரு பெண் என்ன செய்யமுடியும்" என நகர ஆட்சித் தலைவர்கள் பேசிக் கொண்டனர். ஆனால் அம்மையாரின் முயற்சியால் விரைவில் பயன் விளைந்தது.

குடித்துக் கும்மாள மிடுவாரில்லை; ஆடை குலைந்து கிடப்பாரில்லை. இழிந்த பேச்சுக்களும் பாடல்களும் நின்று போயின. சிறை சுறுசுறுப்பான தொழிற்சாலை போன்றும் நன்கமைந்த குடும்பம் போன்றும் காட்சியளித்தது.

சிறைப்பட்ட பெண்டிர் முன்னேற்றக் கழகம் ஒன்றை 1817-ஆம் ஆண்டில் அம்மையார் நிறுவினார். பெண்டிர்க்குத்

தனியிடம் அமைத்தல், குற்றவாளிகளை வகைப்படுத்திப் பிரித்தல், பெண் குற்றவாளிகட்குப் பெண்டிரையே மேலாளராக ஏற்படுத்தல், சமயப் பொதுக்கல்வி புகட்டுதல், பயனுள்ளவேலை தருதல் ஆகியவற்றுக்குக் கழகம் பாடுபட்டது. நல்ல முன்னேற்றம் விளையவே, மேலும் பலப்பல கழகங்கள் தோன்றிச் சிறைப் பட்டார் நலனுக் குழைக்க விரும்பின. ஆயினும் அரசினர் ஒப்புதல் பெறுவதினும், சிறைப்பட்டிருந்த முரட்டு மாந்தரின் ஒத்துழைப்பைப் பெறுவதே இப்பணியில் முதற்படியாக விருத்தல் கண்கூடன்றோ? எலிசபெத் பிரை அம்மையாரையன்றி மற்றொருவரால் அதனைச் செய்திருக்க முடியாது. வறிதே மறை நூலைப் படித்து அறிவுரை பகர்ந்திருப்பின் சிறைப்பட்டாரிடத்து வெறுப்பே தோன்றி யிருக்கக்கூடும். ஆனால், அம்மையாரின் இனிய இயல்பும், குரலிலும் தோற்றத்திலுமிருந்த அருட் கவர்ச்சியுமே பணியை எளிதாக்கியதெனலாம். ஒரு முறை கொலைத் தண்டம் பெற்ற ஒரு மாது அடக்க முடியாதவாறு, பிறரை நடுக் குறுத்திக் கொண்டிருக்கையில் அம்மையாரைக் கண்டவுடனேயே அடங்கி அமைந்தாள் என்பர்.

அம்மையார் குற்றவாளிகளிடம் பேசுங்கால் தான் வேறு அவர்கள் வேறு என்று பிரித்துரைப்பதில்லை. அவர்களோடு உறவு பூண்டு அவர்தம் உள்ளத்தோடு உள்ளமாக ஒன்றித் தம் அருட்கனிவைப் பொழிந்தார்.

அக்காலத்தே கொலைத் தண்டங்கள் மிகுந்திருந்தன. கொலைத் தண்டத்தால் பொது மக்கட்குப் பாதுகாப்பு விளைகின்றது என்ற கொள்கையை அம்மையார் ஏற்றுக் கொண்டாரில்லை. குற்றம் புரிந்து கொலைத்தண்டம் ஏற்ற ஓர் இளநங்கைக்காக ஒரு முறை அரசியலாரிடம் வழக்காடி அரசியலாரின் மனக் கசப்பையும் பெற்றார்.

தண்டங்களின் கடுமையைக் குறைப்பதில் அம்மையார் முழு வெற்றி பெறவில்லை. எனினும், சிறை நலம் பேணுதலில் அவர்தம் பணி வியக்கத்தக்க வெற்றியளித்தது.

ஃச்காத்லந்துச் (Scotland) சிறைகளை 1818-இல் அவர் பார்வையிட்டார். அங்குள்ள கொடுமைகளையும், இழிநிலைகளை

யும் கண்ட அம்மையாரும் அவர்தம் உடன் பிறந்தார் ஒருவரும் அவைபற்றி ஒரு நூல் வெளியிட்டனர். அந்நூலாலும், அம்மையார் முன்பே செய்திருந்த பெரும்பணியைச் சட்ட மன்றத்தினர் அறிந்திருந்தமையாலும் மெல்ல மெல்லச் சிறைநலத் திட்டம் இங்கிலாந்து, ஃச்காத்லாந்து (Scotland), அயர்லாந்து எங்கணும் பரவிப் பயன் விளைத்தது.

ஆத்திரேலியாவுக்கு அனுப்பப்பெறும் குற்றவாளிகளின் இழிநிலையும் அவர் கண்ணுக்குத் தப்பியது. அவர் முயற்சியால் குற்றவாளிகளின் கப்பற் பயணங்களில் ஒழுங்கு முறையும் கடைப் பிடிக்கப்பட்டது. சென்றவர்க்கு ஆங்கு உறையுளும் தொழில் புரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

குற்றவாளிகள் நலத்தோடு அவர் நின்றாரில்லை. ஏதுமற்றோர் இரப்போர் நலத்துக்கும் உழைத்தார். இலண்டனிலும், பிரிட்டனிலும் வீடில்லார்க்குக் காப்பகங்கள் அமைத்து எளிய கஞ்சி உணவு வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

ஐரோப்பா முழுவதும் அவர் பெயர் பரவியது. உருசியப் பேரரசியாரும் அம்மையாரின் முறைகளை அடியொற்றித் தம் நாட்டில் சீர்திருத்தம் பல புரிந்தார். பல நாடுகளினின்றும் இவ்வருணிறை பெருமாட்டியின் அறிவுரைக்காகப் பலரும் கேட்டெழுதலாயினர்.

போதும் என அம்மையார் ஓய்ந்தாரில்லை. 1838-ஆம் ஆண்டில் ஐரோப்பியச் செலவை மேற்கொண்டார். ஆங்காங்குள்ள சிறைகளைப் பார்வையிட ஒப்புதல் பெற்றார். சென்றவிடமெங்கும் வரவேற்கப் பெற்றார். அக்காலத்தில் வெளிநாடுபோவது ஓர் அருஞ் செயலாகவிருந்தது. நாற் குதிரை பூட்டிய மூடு வண்டிகளிலேயே முழுச் செலவையும் நடாத்துதல் வேண்டும். உடல் நலம் குறைந்து வந்தபோதிலும், செலவுகள் ஆமைப்போக்கில் நடந்த போதினும், பலவிடங்கட்கும் அம்மையார் சென்று பெருமக்கள் பலரின் நல்லுணர்வையும், ஈட்டிப் பெற்றார். கல்விக் கூடங்களையும் சிறைக் கூடங்களையும், மன நோயர் அகங்களையும் பார்வையிட்டு அவற்றின் முன்னேற்றத்துக்குரிய வழிவகைகளை எடுத்துரைத்தார்.

பிரசியாவில் சமயக் காழ்ப்பினால் துன்புறுத்தப்பெற்ற புற சமயக் குரவர்கட்காக மன்னனிடம் வேண்டினார்.

செருமானிக்குச்சென்ற காலை, கெய்சர்வர்த்து நிலையத்தைப் பார்வையிட்டார். அதன் நிறுவனர் அம்மையாரின் பணியே தம்மை ஊக்கியதாகத் தெரிவித்தார்.

முதுமைக் காலத்தில் பலரும் அம்மையாரின் பணியை வியந்து பாராட்டினர். வெளிநாட்டார் பலரும் அம்மையாரின் எண்ணங்கள் தத்தம் நாடுகளின் சீர்திருத்தத்துக்கு எவ்வாறு அடிகோலின என்பதைத் தெரிவித்துப் பாராட்டினர். அம்மையாரின் உள்ளம் மகிழ்ந்தது. நாளடைவில் தளர்வு மிகுந்து உடல் நலம் குறைந்தது. தம் மக்களுள்ளும், பெயரர்களுள்ளும் நிகழ்ந்த இறப்புக்களும் அம்மையாருக்குப் பெருந்துன்பம் விளைவித்தன.

1845-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் அம்மையார் இவ்வுலக வாழ்வை நீத்தனர். குற்றவாளிகளை நடத்தும் முறை நன்கு முன்னேறிய இக்காலத்திலும் கூட பிரை அம்மையாரின் கொள்கைகள் பல நோக்கற் பாலனவேயாம்.

தனியறைப் படுத்தல், அமைதியைவற்புறுத்தல், அறைகளை இருட்டாகச் செய்தல் இவை பொருந்தாதவை என்றும் குற்றவாளிகளின் மன நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

மாந்தனைப் பொறியாகக் கருதுதல் தவறு என்றார். அச் சுறுத்தலால் நற்பண்புகளை வளர்க்க முடியாது என்றார்.

இருட்டறையில் அடைத்துவைத்துத் துன்புறுத்துதல் உடல் உள நலன்களை அழிப்பதென்றும், அறவுணர்வுக்கு எதிரான அம்முறைகள் மாந்தனை மேலும் மேலும் இழிவு படுத்துவனவேயன்றிச் சீர்திருத்துவன ஆகா என்றும் வலியுறுத்தினர்.

இக்காலத்துக்கும் புதுமையாகத் தோன்றும் இவ்வெண்ணங்கள் அக்காலத்தில் பேரதிர்ச்சியை உண்டாக்கியதில் வியப்பில்லை. இறையன்பும், இல்லறப்பற்றும் வாய்ந்த அமைதியான இப்பெருமாட்டி தம் நற்கொள்கைகட்கெழுந்த பேரெதிர்ப்புக்குச் சற்றும் அஞ்சினரில்லை. வில்லியம் சாவ்ரே என்னும் சமயப் பெரியாரின் பேச்சைக்கேட்ட அன்று தொட்டு இறக்கும் வரை அவர் உறுதியும் உண்மையும் வாய்ந்த மக்கள் தொண்டராகவே விளங்கினர்.

தமிழா, நீ எங்கே?

துரை-மாணிக்கம்

ஆரங்கே? தமிழ்மகனு? இங்கே வா,வா!
அன்றிருந்த நின்முன்னோர் தொகுத்தளித்த
பேரெங்கே? ஊரெங்கே? பிழைப்பு மெங்கே?
பேச்செங்கே? மூச்செங்கே? விளங்கி நின்ற
சீரெங்கே? சிறப்பெங்கே? முகம் நாணுத
செந்தமிழ்த்தாய் உலாவர,நீ செய்து தந்த
தேரெங்கே? வீறெங்கே? இலக்கியஞ் செய்
திறமெங்கே? உரமுற்றும் போன தெங்கே?

கொடையெங்கே? நடையெங்கே? மறவர் ஊர்ந்த
கொல்களிறு சூழ்ந்துவருந் தூவெண் கொற்றக்
குடையெங்கே? படையெங்கே ஆரங் கென்று,
குரலுயர்த்தி விரல்நீட்டி அயலார்க் கிட்ட
தடையெங்கே? நின்னுணை தவறி னோரின்
'தலையெங்கே' என்பாயத் தருக்கு மெங்கே?
தொடையெங்கே? பாவலர்தங் கூட்ட மெங்கே?
தொல்பெருமை நின்னைவிட்டுப் போன தெங்கே?

வாய்மையெங்கே? அருளெங்கே? சான்றோர் எங்கே?
வான்தடவி முகில்முட்டுங் கலைகள் எங்கே?
தூய்மையெங்கே? ஒழுங்கெங்கே? கணவற் பேணித்
தொல்மறவக் கூட்டத்தை ஈன்று தந்த
தாய்மையெங்கே? பெண்மையெங்கே? தவறு நேரின்
தம்முயிரை வெறுத்தொதுக்கும் மானமெங்கே?
நோய்மையிலாத் திறமெங்கே? உள்ள மெங்கே?
நொடிக்குநொடி தாழ்ந்தமிழ்ந்து போன தெங்கே?

தந்திறனல் அல்லாமல் உயிர்வா ழாத
தாளெங்கே? ஆண்மையெங்கே? நேர்மை யெங்கே?
செந்தமிழ்த்தீம் பாமணக்கும் வாய்கள் எங்கே?
செழும்பாடல் மகிழ்ந்துண்ணுஞ் செவிகள் எங்கே?
சிந்திசைக்கும் தெருக்களெங்கே? பாணர் எங்கே?
சித்துபயில் துறவோர்தம் மறைகள் எங்கே?
மந்திபயில் சோலைகளும் மலைகள் தாமும்,
மறம்பயிலும் களமாகிப் போன தெங்கே?

அன்றிருந்த அறவல்லார் யாத்துத் தந்த
அறமெங்கே? பொருளெங்கே? இன்ப மெங்கே?
குன்றிருந்த விளக்கெனவே உலகோர்க் கீந்த
குறள்நெறிக்கு நடைமாறுத் தமிழன் எங்கே?
இன்றிருந்த நாகரிகப் போலிப் போக்கின்,
இழிநிலைக்கு முடிவெங்கே? விடிவு மெங்கே?
மன்றிருந்த தமிழெங்கே? அதுபோ மாயின்
மறுநொடியில் நானெங்கே? நீதான் எங்கே?

தமிழ்மொழியின் சொற் சிறப்பு.

பொருள் வகை

பொருள் — காட்சி, கருத்து ஆகிய இரண்டிற்கும் பொதுவான பொருள்.
பண்டம் — கட்புலனாவதும், கடின வடிவமுள்ளதுமான உயிரற்ற பொருள்.
சரக்கு — காய்ந்த பொருள்.
தாரம் — இயற்கை விளை பொருள்.
ஆக்கம் — செயற்கை விளை பொருள்.
செய்பொருள் — கையாற் செய்யப்படும் பொருள்.
உரு — கனவடிவுப் பொருள்.
உருவம் — பெருங் கன வடிவுப் பொருள்.
உருப்படி — தனிப்பட்டதும் உயிரற்றதும் ஒன்றன் படியுமான கன வடிவுப் பொருள். (Article)
உடைமை — உடம்பிலுள்ள ஆடையணிப் பொருள்.
மதி — அளவிடப்பட்டு வரி விதிக்கப்படும் கடல் வாணிகப் பொருள். (எ. டு. ஏற்றுமதி, இறக்குமதி)
சொம் — சொந்தப் பொருள்.
சொத்து — சொந்தப் பொருள் தொகுதி (Property)
செல்வம் — விலை மதிப்புள்ள பொருள் தொகுதி.
வெறுக்கை — செறிந்த செல்வம்.
காசு — தனி நாணயம். (Coin)
பணம் — காசுத் தொகுதி. (Money)

— ஞா. தே.

முன்னிதழ்த் தொடர்ச்சி.

நூற்சுருக்கம்

தன்னுணர்வு

தன்னை வேறு எந்த ஒன்றிற்கும் இணையாக வைத்துப் பார்க்காமல், தனக்குத்தன்னையே இணையாக நினைத்துக்கொண்டு பார்த்தால், நம்முள்ளே பொதிந்து வைக்கப் பெற்றிருக்கும் ஒரு பேராற்றலின் ஒளிக் கீற்று நமக்கே நன்கு புலப்படும். அப் பேராற்றல் உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும், அது அதுவாக நின்று இயங்குகின்றது.

தன்னுணர்வால் முங்கிய தன்னுரிமையின் ஒரு தினையளவே நமக்கிருந்தால் போதும். அரிய பெரிய வல்லாண்மையின் பேரெல்லையைக் காலப்போக்கில் நாம் சிறிது சிறிதாக அடைந்து விட முடியும்.

இப்புடவியெங்கும் நீக்கமற விரிந்து சிறகார்ந்து சுடர்வீசிக் கொண்டிருக்கும் ஒரு பேராற்றல் எதுவோ, அதுவேதான் நம்முடைய உள்ளத்திலும், உடலிலும் ஊடுருவிப் பாய்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பேராற்றலே அறிவுக்கும் வினைக்கும் வித்து. இத்தகைய உயரியவித்தை நமக்குள்தரப்பெற்றிருக்கும், புலன் பொறி முதலிய துணைக் கரணப் பொருள்களைக் கொண்டு, நம்மை நாம் பெருமரமாக வளர்த்துக் கொள்வதே நமக்கிட்ட வேலை. அகன்று விரிந்த விசும்பிடை உராய்ந்து திரிகின்ற காற்று நம்முள்ளும் போய் வந்து கொண்டிருப்பதுபோல், என்றும் நிலையாகவுள்ள அப்பேராற்றலையும், அதன் உள் வினைகளையும் மறுப்பது, நம்மை நம் கருவி காரணங்களால் மூடிப் புதைத்துக் கொள்வது போலாகும். அவ்வாற்றலின் உண்மை பற்றி நாம் கூற இயலும்படிதான் நமக்கு அறிவு வளையப் பெற்றிருக்கின்றது. நமக்குள்ள அறிவு நம்மை நாம் கண்டு

கொள்ளவே அன்றி, நம்மை உண்டாக்கிய பேராற்றலை ஆராய்ந்து கண்டு கொள்வதற்காகத் தரப்படவில்லை. அதை ஆராயும்போது அது நிலைத்து விடுகின்றது. அந்தப் பேராற்றலைப் பற்றி நாம் அதிகமாகச் சொல்ல இயல்வது இவ்வளவே. மிகவும் இழிவாக நம்மால் கருதப்பெறும் ஒரு பேதையின் உள்ளத்துள்ளும், அவ்வறிவொளி ஊடுருவிக் கொண்டிருக்கின்றது. ஆனால் தனக்கமைந்த வினைபுரி கருவிகளின் தன்மைகளைக்கூடச் சரிவரப் புரிந்துகொள்ளும் ஆற்றலற்ற அவன், அவனை ஊடுருவி நிற்கும் அப் பேராற்றலை உணர்தல் சாலாது. அவன் அதுபற்றி ஓரளவு கூறுவதானாலும், அதனை மாறுகவே உணர முடியும். விழிகளின் வேலைத் திறனையே சரிவரப் பெறாத குருடன் கதிரொளியின் வண்ண வீசல்களை யாங்ஙன் அறிவான்? ஆனால் தனக்கமைந்த பார்வைக் குறைவால் உள்ளோடி நிற்கும் இருளுக்கு மாறுக ஒரு பெருஞ்சுடர் பொலிந்து கொண்டிருப்பதை அவன் நம்புகின்றான். இது போலவே பேதை இறையாற்றலை நம்புகின்றான். நம்பாத முழுப் பேதையைவிட அதனை நம்புகின்ற அரைப் பேதை ஒரு படி உயர்ந்தவன் தானே?

தன் அக ஆற்றலை ஒருவன் உணரும் பொழுது அந்த ஆற்றலின்மேல் அமைந்த பருப் பொருள்களான கருவிகள், சமயங்கள், புராணங்கள், அவற்றில் வரும் தொடர் மொழிகள், கோயில்கள் யாவும் பயனற்றுச் சாய்ந்து விடுகின்றன. குருடன் தன் கையுணர்வால் நுண் பொருள்களின் சாயல் போன்று அமைந்த படிவங்களைத் தொட்டு அறிகின்றான். பார்வை கிடைத்தவுடன், கையால் நீவி அறிகின்ற அப்படிவங்கள் பயனற்று, அவற்றின் உண்மையான மூலத் தோற்றங்களையே நேரில் கண்டு அறிவால் உணர்கின்றான். குழந்தை முதலில் ஒவ்வொரு எழுத்தாகக் கூறிக்கற்று, நாளடைவில் ஒரே பார்வையில் ஒவ்வொரு சொற்றொடராகக் கூட்டிப் படிப்பதுபோல் பருப் பொருள் தோற்றப் பழக்கம், நாளடைவில் உணர்வின் பழக்கமாக மாறி, அதனுள் ஊடுருவிய உண்மையை ஒருவன் கண்டு கொள்ள உதவுகின்றது. அக்கால் அவன் ஒவ்வொரு எழுத்தாகப் படிக்கத் தேவையில்லை. பார்த்தளவிலேயே அதன் முழுத் தோற்றத்தையும் உணரமுடியும்.

நமக்கு முன்பாக வாழ்ந்த பேரறிஞர் தம்மை நாம் தொடர வேண்டுவதில்லை. அவர்தம் உணர்வின் எல்லைக்குமேல் நாம் நம் உணர்வைச் செலுத்திக்கொண்டு போகவேண்டும். தரையிலிருந்து நம்மை ஒருவன் தூக்கி, அவன் தலைவரை உயர்த்துவானுனல், நாம் நம் தலைக்குமேல் என்ன இருக்கின்றது என்பதையே காணவேண்டுமல்லாது, நம்மைத் தூக்கி நிறுத்தியவனை நாம் குனிந்து பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. நமக்கு முன்னுல் உள்ள அறிஞர்களும், சமயத் துறவிகளும், நம்மை இத்தன்மைக்குக் கொண்டு வந்துள்ளனர். இனி நாம் அவர்கட்குமேல் நம்மை நடத்திக் காட்டவேண்டும். இந்நிலையில் அவர்களைப்பற்றி நாம் பாராட்டிக் கொண்டிருக்கத் தேவையென்ன?

மாந்தன் மருண்ட பார்வையால், நலிந்த பேச்சையே பேசுகின்றுன். நாம் இப்படித்தான் எ்ண்ணுகின்ருேம், இப்படித்தான் இருக்கின்ருேம் என்றிராமல், ஒரு முனிவரையும் ஓர் அறிஞனையும் உவமை காட்ட வேண்டியதில்லை.

ஒரு தாமரை மலரோ, ஒரு குருவியோ, அல்லது ஒரு கோழிக் குஞ்சோ தங்கட்கு முன்பிருந்த தம் முன்ஞேரைப்பற்றி எண்ணி, தம் வாழ்க்கையை மலர்த்துவதில்லை. தங்களைத் தாங்களாகவே எண்ணி வாழ்கின்றன. நமக்குள்ள ஆற்றலைக் கொண்டு நாமாக நம்மை நாம் நடத்த வேண்டுமேயல்லாமல் வேறு ஒன்றின் போலியாக நம்மைநாம் எண்ணிக் கொள்ளவோ நடத்திக் கொள்ளவோ வேண்டுவதில்லை. மலர்ந்து மணம் வீசும் மலரில், அதைவிட வேறு ஆற்றலில்லை. அதன் ஆற்றலை அது முழுமையாக அடைந்ததே அது பெற்ற முழுமை. நம் முழுமையும், நம்மை எவ்வளவுக் கெவ்வளவு, நாமாகச் செய்து கொள்ளல் முடியும் என்பதைப் பொறுத்தே இருக்கின்றது. ஒரு கனியின் முழுமை கனியே. ஒரு வேரின் முழுமையும் அந்த வேரே. மாந்தனின் முழுமையும் மாந்தனே. மணமின்றி வெறுந் தோற்றத்தை மட்டுமே காட்சியளவில் காட்டுகின்ற ஒரு மல்லிகை மலரை நாம் பார்க்க முடியாது. அப்படிக் காட்டும் ஒன்றும் மல்லிகையாகாது. அதுபோல் தன்னுள் பொதிந்துள்ள மணத்தை முழுமையாக மலர்த்தி, மணம் வீசச் செய்யாமல்

வெறும் தோற்றத்தையே காட்டிக் கொண்டிருக்கின்ற ஒரு மாந்தனும், மாந்தன் ஆகிவிட முடியாது.

நேற்றிருந்த எண்ணங்களைக் கடந்து இன்றிருக்கின்ற எண்ணங்கட்கு நாம் வளர்ந்திருக்கின்றோம். மேலும் நாம் நாளைக்கிருக்கின்ற எண்ணங்களை நோக்கி நடையிடவேண்டும். இவ்வாறின்றி நேற்றிருந்த எண்ணத்தையும், அதற்கு முன் பிருந்த வரலாற்றுக்காரர் தம் எண்ணங்களையும் எண்ணிக் கொண்டு நாம் கடந்த காலத்திற்கு நழுவுவது, நம்மை நாம் இழிவுபடுத்திக் கொள்வதாகும்; நம் கால்களை வெட்டிக் கொள் வதாகும்; நம் பார்வைகளைச் சுருக்கிக் கொள்வதாகும். மலையின் அடிவாரத்தினின்று உச்சி நோக்கிப் போகவே நமக்குக் கால் களும், கைகளும் கண்களும் வேண்டும். அங்கிருந்து கீழ்வர அவை தேவையில்லை. கால் கைகளை மடக்கிக் கொண்டு, கண்களை நன்றாக இறுக்கி மூடிக்கொண்டு உருள வேண்டியது தானே?

நாம் எண்ணுவது என்று ஒன்றும் இல்லை. நாம் சொல்வது என்றும் ஒன்றில்லை. நமக்குள் ஊடுருவி நடந்து கொண்டிருக் கும் பேராற்றலின் அலைகளே அவை. அதனை மடக்கி அடக்கி விட்டு நாம் நம்மைத் தாறுமாறாக ஓட்டிக் கொண்டு போவதில் நம் வாழ்க்கை வெற்றியடைந்ததென்று கூறமுடியுமா?

எவரும் காலடி வைக்காத புது நிலப் பகுதியிலேயே நம் காலடிகள் பதியவேண்டும். நம் முன்னோர்கள் நடந்து குழப்பிய சேற்றையே நாமும் குழப்பத்தான் வேண்டுமா? அவர் தம்மை விட ஆற்றலொடும், விரைவொடும் நம்மை நாம் செலுத்திக் கொண்டு போகவேண்டும்.

ஒருவன் தன் முயற்சியை நிறுத்திக் கொள்ளுங்கால் அவன் ஆற்றலெல்லாம் அவனை விட்டுப் போய்விடுகின்றது. தன் ஆற்றலை முற்றிலும் வெளிப்படுத்துபவனையே, இருக்கின்றான் என்று கூற முடியும். தன் உள்ளத்தில் எழும் அரிய ஆற்றலைப் பற்றி அறியாதவனையோ, குறைவாக அறிந்த ஒருவனையோ, தன் ஆற்றலை அறிந்து அதன் வழி நடக்கின்றவன் எளிதாக அடக்கி விடுகின்றான்.

ஒரு பொருள் தனக்கியல்பான ஆற்றலை வெளிப்படுத்தும் பொழுதே அது பொருளாக நம்மால் மதிக்கப்படுகின்றது. அப்பொழுதுதான் அதுவும் நிலைக்கின்றது. அதன் ஆற்றலை அது கை விட்டுவிடும்பொழுது அதைப் பொருளாக நாம் மதிப்பதில்லை. [கை விளக்கிலுள்ள மின் கலம் (Cell) தன் ஆற்றலை வெளிப்படுத்தி கை மின்விளக்கை (Battery Light) எரிக்கும் வரையில் அதை நாம் மதிப்பதும், அதன் ஆற்றலை இழந்துவிட்டபின், அது தன் மேனிப் பளபளப்பில் எட்டுணையும் குறையாதிருப்பினும், அதனை மதியாது ஒதுக்குவதும் இல்லையா?] தன்னுற்றலை அழுத்தந் திருத்தமாக நம்பிக் காத்துக்கொள்ளாத ஒன்றினை இறையாற்றலும் காப்பதில்லை.

ஒரு மாந்தன் தன்மேல் தானே நம்பிக்கை கொள்ள முயல்வதில்லை. இவன், பிறர் தன்னை நம்பவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன பொருள் இருக்கின்றது?

கோயில்களில் நடக்கும் சொற்பொழிவு, மந்திர மொழி இவற்றின் ஆரவாரத்தைவிட, அதன் பின்பு இருக்கும் அமைதி தான் எனக்கு மிகவும் விருப்பமானது. தன்னைச்சுற்றி அறத்தின் சாயல்களைக் காப்பாக அமைத்துக்கொண்டு இம்மாந்தர் வாழ்வார்களாயின், அவர்தம் மாட்டு எத்தகைய அமைதி, பெருந்தன்மை, திறமை முதலியன சுடர்விடும் தெரியுமா? நம் உயிரொடும் ஊனொடும் நெருங்கியவர்கள் என்னும் பொருட்டிற்காக நம் மனைவி மக்கள், பெற்றோர், உற்றோர் முதலியோர் செய்யும் பிழைகளைச் சரியென்று ஏற்க முடியுமா?

சிற்சில கால், உன்னை வீண் வேலைகளில் ஈடுபடுத்த இவ்வுலகம் முனைந்து நிற்கும். நீ அமைதியாக இருந்து உன் ஆற்றலை மிகைப்படுத்திக் கொள்ள முயலும்போது, உன் மனைவி மக்கள், நண்பன், இரவலன், நோயாளி, கோழை, ஏழை எல்லாரும் ஒருங்கு கூடி வந்து, உன் அமைதிக் கதவைத் தட தடவென இடித்து, ''எங்களிடம் நீ வரவேண்டும்; எங்களோடு சற்றுப் பேசவேண்டும்'' என்று ஓயாமல் அழைக்கலாம். ஆனால் நீ உன் ஆற்றலை அப்படியே புறந்தள்ளிவிட்டு உன்னை அதனின்று விடுபடுத்திக் கொண்டு, அவர் தம்பால் ஓடிவிடாதே!

Rock'n Roll

"ராக் அண்' ரோல்"

(அமெரிக்கக் கப்பல்களினின்று இறக்குமதியாகி, தமிழ் நாட்டைப் பிடித்துள்ள இந்த இழிசுவைக் களியாட்டத்தைப் பற்றி 'பாப்லோ கேசல்ஃச்' (Pablo Casals) என்னும் அமெரிக்கரே எழுதுவது இது...!)

''ராக் அண்' ரோல் என்னும் அருவருக்கத்தக்க களியாட்டத்தைப் பற்றி என் கருத்து என்னவென்று அறிய விரும்புகின்றீர்களா? அது ஒலியுருவில் அமைந்த நஞ்சு. அதனைக் கேட்கும்போது இசையின் இழிநிலைக்கு மட்டுமன்று; அதில் மயங்கிக் கிடக்கும் மக்கட்காகவும் நான் மிக வேதனையுறுகின்றேன். பொது மக்களின் இசைத் துறையில் அமெரிக்கா பின்னேக்கிச் சென்றுவிட்டது. இருபது ஆண்டுகட்கு முந்திய அமெரிக்க இசை மிக உயர்ந்ததாகவும் நலம் பயப்பதாகவுமிருந்தது. ஆனல் 'ராக் அண்' ரோல்' – கலையின் பகை! வாழ்க்கையின் பகை! நல்ல இசை, உள்ளத்தையும் உணர்வையும் உயர்த்தவேண்டும். இந்த இசையோ, உள்ளத்தைத் தாழ்த்துகின்றது. ஆனல், பயிற்சியும் திறமையுமற்ற பதர்களுக்கும், இசைத் தட்டுப் பதிவாளர்களுக்கும் ஒரே இரவில் கோடிக் கணக்காகப் பணத்தைக் குவிக்க இதுவழியாகவிருப்பதால், பொன்னை ஒதுக்கிப் போலியை நாடும் இளைஞர்தம் உள்ளப் போக்கினைப் பயன்படுத்திச் சுரண்டும் இக்கொடுமை எளிதில் மறையாது.

இந்நிலையில் கடனுற்ற வேண்டுவது பெற்றேர்தாம். இவ்விசையைக் கேட்கக் கூடாது என்று தம் மக்கட்குத் தடை விதிப்பதன்று அவர் கடன்; உயர்ந்த இசையைச் சுவைத்துணர அவர்க்குக் கற்றுத்தருவதும், வீட்டில் அவ்விசையைக் கேட்க முழு வாய்ப்பளிப்பதுமே ஆகும்!

முன் பக்கத் தொடர்ச்சி.

உன் உறுதியற்ற அலைமோதும் உள்ளந்தான், உனக்குப் பிறர் தொல்லை தரும்படியான ஆற்றலை அவர்கட்குத் தருகின்றது. உன் உள்ள ஆற்றலைப் பயன்படுத்துவாயானல், உன் இசையின்றி எவனும் உன்னை நெருங்கி உன் எண்ணங்களை நிலைகுலைத்துவிட முடியாது.

— தொடரும்

நெஞ்சுக்கு நல்லுரை!

த. கோவேந்தன்.

பக்கத் திருப்பவன் தோழனல்லன் – நம்
பான்மைக் குகந்தோனும் தோழனல்லன்!
ஒக்கவே நந்துயர் கண்டுணர்வான்; – தன்னை
உண்மையாய்த் தோழனென் றேயறிவாய்!

தேனெனப் பேசுவோன் நண்பனல்லன் – நாளுந்
தேடி வருவோனும் நண்பனல்லன்!
ஊனுயிர்க் கூறெனில் உள்ளுருகும் – நல்ல
உணர்வுடை யோனுடன் கூடிடுவாய்!

கடன்கொடுப் போனும்நம் பாங்கனல்லன் – நமைக்
கடன்தரக் கேட்பானும் பாங்கனல்லன்;
தொடர்துயர் காலத்தில் பங்கிருப்பான் – நல்ல
தூய்மனத் தானென்று கூடிடுவாய்!

கனிமொழி பேசுவோன் துணைவனல்லன்! – தோளிற்
கைபோட் டணைவானுந் துணைவனல்லன்!
முனிவொடு கடிந்துநம் வாழ்வுயர்த்தும் – மதி
முனைப்புடை யோனுடன் கூடிடுவாய்!

'மது'கைக் கொடுப்போனும் அன்பனல்லன்! – பிற
மகளோ டிணைப்பானும் அன்பனல்லன்!
எதுதீது நன்மையென் றேயுரைக்கும் – உயர்
ஏந்தலைக் கண்டுளங் கூடிடுவாய்! *

ஒற்றுமை உணர்வுக்கு மொழியே சிறந்த கருவி.

'மக்களுக்குள் ஓர் இணைப்பை ஏற்படுத்தவும், ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளவும் ஒரு சிறந்த கருவியாகவிருப்பது மொழியேயாகும்' என்று நடுவனரசு அமைச்சர் பேராசிரியர் ஃஉமாயூன் கபீர் வங்க மொழி பரப்புக் கழகத்தின் இருபத்தாரு வது பட்டமளிப்பு விழாவில் கருத்துத் தெரிவித்தார். *

மணிமொழி மாலை

ஒரு கல்லால் தடுக்குண்டு ஒரு முறை தவறி விழுதல் குற்றமில்லை. ஒரே கல்லால் இடறப்பட்டு இருமுறை தவறி விழாதே; அது மூடத் தன்மையாகும். — சிசரோ.

○ ○ ○

நமக்கு வரும் துன்பம் நம் உடைமைகள் எல்லாவற்றையும் துடைத்துவிடலாம். ஆனால் நம் துணிவை ஒரு போதும் அதனால் துடைத்துவிட முடியாது. — செனேகா.

○ ○ ○

பெருந் தொல்லைகளின் நடுவில்தான் உண்மையான துணிவைக் காணமுடியும். — இரெக்னால்டு.

○ ○ ○

உண்மையைச் சொல்லும் துணிவற்றவர்தாம் பொய் கூறுகின்றனர். அவர்களே கோழைகள்! — சாக்கின் கில்லர்.

○ ○ ○

காவல் மிகுதியாக உள்ள பொருள்கள் மேலேயே மக்கள் வேட்கை யுறுகின்றனர். அளவுக்கு மீறிய கட்டுக் காவலே திருடர்களை உண்டாக்குகின்றது. — ஓவிட்

○ ○ ○

இதுவரை நாம் கற்றுக் கொண்டவற்றின்படி நாம் நடக்க முயற்சி செய்யாமல், மேலும் மேலும் கற்றுக்கொண்டே போவது, உண்ட உணவு செரியாமலிருக்கும் பொழுதே மேலும் மேலும் உண்டு கொண்டே இருப்பதைப் போன்றது. — பர்க்.

○ ○ ○

பேச்சைவிட எண்ணம் ஆழமானது; எண்ணத்தைவிட உணர்ச்சியே ஆழமானது. — கிரான்க்.

ஒருவன் எப்படி இறந்தான் என்று கேட்காதே! எப்படி வாழ்ந்தான் என்று கேள். — சான்சன்.

○ ○ ○

உண்மையான நண்பர்கள் நம்மிடம் செல்வம் உள்ள பொழுது, நாம் வருந்தியழைத்தாலும் வரத்தயங்குவர்; செல்வம் இல்லாதபொழுது நாம் விரும்பாவிட்டாலும் வந்து துணை நிற்பர்.

— மில்டன்.

○ ○ ○

உலகில் ஆவலைப்போன்ற நெருப்பில்லை;
வெறுப்பைப் போன்ற பகையில்லை;
மயக்கம் போன்ற வலையில்லை;
காமத்தைப் போன்ற புயலில்லை.

— புத்தர்.

○ ○ ○

கணவன், மனைவி இருவருள் ஒருவர் அறிவோடு நடப்பவராக விருந்தால் இருவரும் மகிழ்ச்சியாக விருக்கலாம்.

— சூலியசு இராசுடாண்டு.

○ ○ ○

பொறுத்திருப்பதனால் எத்தகைய கடினமான வேலையையும் செய்துவிடலாம். தண்ணீரைக்கூட சல்லடையில் எடுத்துச் செல்ல முடியும்; அது உறையும் வரையில் பொறுத்திருக்க வேண்டும்; அவ்வளவுதான். — நியூயார்க் டெய்லி மிரர்.

○ ○ ○

'வேலை'க்கு முன்னே 'வெற்றி' வருவது அகர முதலி (Dictionary) ஒன்றில்தான். — பிளேட்டோ.

○ ○ ○

நம் விருப்பம்போல் யாதொரு கொள்கையுமின்றிச் செய்வது விளையாட்டு. நாம் செய்ய வேண்டியதைக் குறிப்பிட்ட கொள்கையுடன் செய்வது வேலை. — இரசுக்கின்.

ஊர்ப்பெயர்.

குறிச்சி, குடி — குறிஞ்சி (மலை) நிலத்தூர்.

பாடி, சேரி — முல்லை (காடு) நிலத்தூர்.

ஊர் — மருத (வயல்) நிலத்தூர்.

புறந்தலை — பாலை நிலத்தூர்.

பாக்கம், பட்டினம் — நெய்தல் (கடற்கரை) நிலத்து ஊர்.

ஆறை — ஆறு உள்ள ஊர்.

புத்தூர் — புதிய ஊர்.

மூதூர் — பழைய ஊர்.

பட்டி — கால்நடைத் தொழுவமுள்ள ஊர்.

பற்று — சிறிய ஊர்களின் தொகுதி.

பள்ளி — பௌத்த, சமண மடமுள்ள ஊர்

பாளையம் — படை இருக்கும் ஊர்.

பட்டு — பாளையத் தலைவர்களின் சிற்றூர்த் தொகுதி.

மங்கலம் — பார்ப்பார் (அறவோர்) இருக்கும் ஊர்.

வாடை — வேட்டுவர், அல்லது மாடு கன்று வைத்திருப்பார் குழுமியுள்ள ஊர்.

நத்தம் — பல மக்கட் பிரிவினரும் கலந்துவாழும் ஊர்.

குடி — ஒரு குடும்பத்தாரோ, அல்லது ஒரு குலத்தவரோ வாழும் ஊர்.

குடியேற்றம் — மக்கள் புதுவதாகக் குடியேறிய ஊர்.

கல்லாங்குத்து — கடின நிலமுடைய ஊர்.

முரம்பு — கற்பாங்கான மேட்டு நிலத்தூர்.

பேட்டை — சந்தை கூடும் ஊர்.

எயில் — மதில் சூழ்ந்த ஊர்.

புரம், புரி — அரசர் வாழுந் தலைநகரம்.

— ஞா. தே.

பாட்டும் சபதமும்

ஆசிரியர்: திரு. மது. ச. விமலானந்தம்.

(விலை. 1-50 உருபா. வெளியீடு: பைந்தமிழ்ப்பண்ணை,
472, கீழ வாயில், தஞ்சாவூர்.)

சுப்பிரமணிய பாரதியாரின் 'குயிற் பாட்டையும்' 'பாஞ்சாலி சபதத்தையும்' பற்றிய ஆராய்வு இது. ஆராய்வு என்பதினும் புகழ் மாலை என்றே கூறிவிடலாம். முன்னது தன்னுணர்ச்சிப் பாட்டென்றும், பின்னது புறவுணர்ச்சிப் பாட்டென்றும் கூறி அவற்றின் வேறுபாட்டைப் பல்லாற்ருனும் விளக்குவது பொருத்தமாக விருக்கின்றது.

ஆங்கில இலக்கிய ஆய்வு முறைப்படி, இலக்கியத்திற் குயிற் பாட்டுக்குரிய சிறப்பிடத்தை ஆசிரியர் சுட்டிக் காட்டு கின்ருர். தன்னுணர்ச்சிப் பாட்டாகிய இக் கதை பொதி பாட்டுத் தமிழிற் புதிய முயற்சி என்றும், இத்தகைய நூல் தமிழிலக்கியத் தில் முன்பில்லாத குறையை நிறைவு செய்யும் ஒப்பற்ற நூல் என்றும் புகழ்கின்ருர்.

வகைப் புதுமையில் எப்பாட்டுந் தனிச் சிறப்புப் பெற்று விடாது. உள்ளார்ந்த இலக்கியப் பண்பே சிறப்பாகும். மிட்டாய் விற்பவன் புதிய புதிய வடிவங்களில் மிட்டாய் செய்து விற்கின்ருன். சுவையாலன்றி வடிவத்தால் அம் மிட்டாய்க்குத் தனிச் சிறப்புக்கிட்டுவதில்லையே!

பழந் தமிழிலக்கியத்தில் குயிற் பாட்டுப் போன்ற தன்னு ணர்ச்சிப் பாட்டில்லை என்பது தமிழிலக்கியத்தின் குறையன்று. நுழைந்து பார்ப்பின், உயர்ந்த செறிந்த உணர்வுகளும் இயற்கை ஈடுபாடுகளும் வேறுவடிவில் திகழ்வது தெரியும். ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றேரான பழந்தமிழ்ப் புலவர், தாம்

உணர்ந்தவற்றைத் தம் சொந்த உணர்ச்சியாக (Subjective) வெளியிடாமல் பொது நிலையில் வெளியிட்டுயர்ந்தனர். இஃதுணராமல் குயிற் பாட்டைப் புகழ்வான் பழந்தமிழிலக்கியத்திற் குறை காண்பது பொருந்தாது.

ஆங்கில நூற்களோடு குயிற் பாட்டை ஒப்புமை தோன்ற நிறுத்திக் காட்டுவது நன்றே! ஆனல் ஆங்கில இலக்கிய மரபின்படி தமிழ் நூல்களை ஆசிரியர் அளக்கின்ருரோ என்று தோன்றுகின்றது. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மரபுண்டு. அம் மரபின்படிதான் இலக்கியம் செழித்துக் கிளைத்துத் திகழும். அவ்வவற்றை அவ்வந் நிலையிலேயே மதிப்பிடல் வேண்டும். குயிற் பாட்டைக் குழல் குலைப்பு (Rape of the Lock) எனும் ஆங்கிலப் பாடலுடன் ஒப்பிடுவதில் எப்பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

"வேதாந்தமாக" என்ற ஒரு சொற்றொடர் குயிற் பாட்டில் இல்லாது போயிருப்பின், அப்பாட்டில் எந்த ஆய்வாளனுவது "வேதாந்தப்" பொருளைத் தானே உணர்ந்திருக்க முடியுமா என்பது ஐயமே. இந்நிலையில் 'வேதாந்த' விளக்கம் புரிவது வலிந்த முயற்சியே.

அதுபோன்றே குயிற் பாட்டில் அகத்துறை மரபினதாகிய "கழகக் காதலின் சிறு வார்ப்பை" ஆசிரியர் காண்பதும் குறு நகை விளைவிக்கின்றது. ஆசிரியர் கருத்தின்படி பார்ப்பின், இன்று வெளியாகும் ஓரிழிந்த திரைப் படத்திற்கூடக் கழகக் காலக் காதலின் சிறு வார்ப்பினைக் காணக் கூடுமே!

இல்லாத சிறப்புகளை வருவித்துப் புகழ்வதினும், இருக்கும் உண்மைச் சிறப்பினைப் பிறரும் சுவைத்துணருமாறு தெளிவுபட உரைப்பதே ஆய்வாளரின் கடனுகும். வண்ணனை, இயற்கை, இசை, உவமை போன்ற சிறு தலைப்புக்களில் ஆசிரியர் குயிற் பாட்டில் தாம் உணர்ந்தனவற்றை எடுத்துக்காட்டுகளுடன் நன்கு விளக்கிச் செல்கின்ருர். எனினும் உண்மை மொழிகளிலும் புகழ் மொழிகளே நூலெங்கும் அள்ளித் தெளிக்கப்படுகின்றன. ஆசிரியரின் ஆர்வம் அவர் தம்மையே மறக்கச் செய்கின்றது போலும்!

ஆசிரியரின் நடையும் முதிரா நடையே. வெற்றுச் சொற்களின் மயக்கத்தை ஆசிரியர் இன்னமும் கடந்து வரவில்லை. வட சொற்கள் மிக விரவிக் கிடக்கின்றன. இக் கலப்பு, தமிழுக்கு ஆக்கம் தருவதாகவில்லை. பாட்டு, பா, யாப்பு, செய்யுள், தூக்கு என்றெல்லாம் நுண்ணிய வேறுபாடுகளைக் குறிக்க நற்றமிழ்ச் சொற்களிருக்க, வடமொழியடிப் பிறந்த "கவிதை" என்ற சொல் எச்சிறப்புக் கருதி இன்று தமிழ்ப்புலவரால் வழங்கப்படுகின்றதோ நாம் அறியோம். தமிழனின் உயிர் நிலையான பாட்டினைக் குறித்தற்குக்கூட ஒரு தமிழ்ச் சொல் இல்லாது போமாயின் அது எத்தகைய பெரிய இலக்கிய வீழ்ச்சி நிலை என்பதையும், எத்தகைய தவறான கருத்துக்களைப் பின்னால் எழுப்பக் கூடும் என்பதையும் தமிழ்ப் பேராசிரியர்களும் புலவர்களும் உணர்ந்து பார்க்க வேண்டுகின்றோம்.

தமிழுக்குப் புதிய ஆக்கம் தேடித்தர வேண்டும் என்ற ஆசிரியரின் ஆர்வம் பாராட்டற் குரியது. தமிழரின் எழுச்சிக்கும் பெருமைக்கும் ஏற்ப மேலும் பல தெளிந்த முயற்சிகளை ஆசிரியர் மேற்கொண்டு நற்றமிழ்ப்பணி புரிவாராக.

"கல்லாடன்"

பரணி — திங்களிரிதழ்.

(விலை 25 காசு. கிடைக்குமிடம்: பரணி, சென்னை-28.)

எவ்விதச் சிறப்பு நோக்கமுமின்றித் தமிழகத்தில் அவ்வப்போது முளைத்துக் கொண்டிருக்கும் தாளிகைகளுள் ஒன்று. மொழியறிவிலாதார் எழுத்தும் வாழ்வுநலங் காவா நூல்முயற்சியும் தமிழகத்திற் பரவித் தீங்கு விளைக்க இவ்விதழும் ஒரு கருவி போலும்! வெறுங் கதைகளையே வெளியிட ஒரு தாளிகையா?

— 'கல்லாடன்'

நயப்பும் நாயகமும்

ஒரு பொருளை விரும்புகிறவன் அதைப் போற்றிக் காப்பா னுதலின், விரும்பற் கருத்து காத்தற் கருத்தையுந் தழுவும்.

எ—டு: பேணுதல் = விரும்புதல், போற்றுதல். ''தந்தை தாய்ப் பேண்'' என்னும் ஒளவையார் கூற்றை நோக்குக. ஒரு தலைவனுக்கு அவன் கீழ்ப்பட்டவர் மாட்டன்பு இருத்தல் வேண்டுமாதலால், விரும்புதல் குறித்த சில சொற்களி னின்று தலைமை குறித்த சொற்கள் தோன்றியுள்ளன.

நம்புதல் = விரும்புதல்.

''நம்பும் மேவும் நசையா கும்மே'' (தொல். உரி - 31)
நம்பு – நம்பன் = தலைவன். நம்பு – நம்பி = தலைவன்.
நயத்தல் = விரும்புதல். நய – நாயம் – நாயன் = தலைவன்
நாயம் - நாயகம் – நாயகன் = தலைவன்.
வேட்டல் = விரும்புதல். வேள் = தலைவன். வேள் – வேளான் = தலைவன்.

நம்பு நய என்னும் இரு சொற்களும் ஒரே யடியினின்று திரிந்தவையே.

நாயன் = தலைவன், அரசன், கடவுள், தந்தை.

''நாயனார் போனநாள் இன்றென்று
அகத்திலுள்ளோ ரெல்லாருங் கூறி'' (சீவக.2097.உரை)

என்னுமிடத்து நாயனார் என்பது தந்தையைக் குறித்தது. நாயன், நாய்ச்சிமார் என்னுந் தொடர் தலைவன் தலைவியரைக் குறிக்கும்.

இறைவனடியாரையும் தலைவரோ டொப்பக் கருதும் வழக்க முண்மையால், நாயன் நாயனார் என்னும் பெயர்கள் அடியாரை யுங் குறிக்கும். வள்ளுவனார்க்கு நாயனார்ப் பட்டம் வழங்குவது அவரது புலமைத் தலைமை பற்றியாகும்.

நாயன் – நாயர் = சேர (மலையாள) நாட்டுப் படைத் தலைவர் வழிவந்த குலத்தார். நாயன் என்பது தண்ட நாயன்

என்பதன் குறுக்கம்; நாயடு, நாயுடு என்பன தெலுங்கு வடிவங்கள்.

நாயன் – நாயந்தை – நயிந்தை = ஆண்டான், அடிமை வைத்தாளுங் குலத் தலைவன், சில குலத்தார் பட்டப் பெயர்.

நாயந்தை என்பது விளி வடிவில் நாயந்தே (நாயன்தே) என்றாகும்.

நாயன் – நாயகன் = தலைவன், கணவன், அரசன், கடவுள்.

நாயகம் = தலைமை.

நாய்க்கன், நாயக்கன் என்பனவும் படைத்தலைமை குறிக்கும். இவ்வடிவங்கள் முதலாவது குலத் தலைவர்க்கு வழங்கியவை.

நாயன் – (நாயர்) – நாயிறு = கோள்களுள் தலைமையான கதிரவன், அதற்குரிய கிழமை.

நாயிறு – ஞாயிறு. நாயிறு என்பதே உலக வழக்கு.

குறிப்பு: நாயன் என்னும் பெயர் தந்தைப் பெயராகவும் குலப் பட்டப்பெயராகவும் வழங்கும் வழக்கு வடமொழியிலில்லை. தலைவன் கணவன் என்ற பொருளிலேயே அவை அங்கு வழங்குவன. மேலும், தமிழில் வழங்கும் பல்வேறு வடிவங்களும் வடமொழியிலில்லை. நாய நாயக (Nayaka) என்ற இரு வடிவங்களே அங்குள.

ஞாயிறு என்னுங் கிழமைப் பெயர் தொன்று தொட்டு வழங்கி வருவது.

நாயகன் என்னுஞ் சொல்லுக்கு வடமொழி யகர முதலியிற் காட்டப்படும் வேர் நீ என்பது. அது செலுத்துதலை அல்லது நடத்துதலைக் குறிக்கும். அச்சொல்லும் 'நூ' என்பதன் திரிபான 'நீ' என்பதே. நீத்தல் = செலுத்துதல். நீயான் = கலஞ் செலுத்துவோன்.

(மொழிப் பேரறிஞர்: ஞா. தே. முதல் தாய் மொழி.)

முன்னிதழ்த் தொடர்ச்சி.

அறிவியல்

விண் வெளிச் செலவு.

இனி இவற்றைவிடக் கடுமையான பயிற்சிகளும் இருந்தன. கோளெ∴ய்தி இயங்கும்பொழுது தாங்கற்கரிய அசைவு இருக்கும். கோளெய்தியின் நுனியில் பொருத்தப் பெற்றிருக்கும் வான் வெளிக் கப்பலுள் அதிர்ந்து குலுங்கும் பொறிகளை எவ்வளவு தான் குறைவாக இயக்கினுலும் கப்பல் புறப்படுகையில் ஏற்படும் பேரதிர்ச்சிகளைத் தடுக்க இன்னும் அறிவியலாருக்கு இயல வில்லை. இலக்கக் கணக்கான குதிரைத் திறன் கொண்ட கோளெய்திகள் வேலை செய்யத் துவங்குகையில் பேரதிர்வு இருக்கத்தானே செய்யும். விண்வெளிக் கப்பல்களில் வைக்கப் பெற்ற நுண்பொறிகள் அனைத்தும் இந்தப் பேரதிர்வைத்தாங்கிக் கொள்ளும்படி அமைக்கப் பெற்றிருந்தன. இவைபோல் மாந்தன் உடலிலுள்ள நுண் பொறிகள் அந்த அதிர்வைத் தாங்கும் வன்மைபெற வேண்டுமல்லவா? உயிர் உறுப்புகளுக்கு இதனல் சேதமில்லை யெனினும் இந்த அதிர்வுகளுக்கு உடலைப் பழக்கப் படுத்திக் கொள்ளுதல் நலம். எனவே எங்களை அதிர்வுப் பொறிகளில் வைத்து உடலைக் கடுமையாகக் குலுக்குவார்கள். இந்தப் பயிற்சியில் மருத்துவர்கள் மிகவும் கண்டிப்பாக விருந்த னர். பயிற்சியின்போது நெஞ்சாங்குலையில் ஏற்படும் மிகச் சிறிய மாறுதலைக்கூடக் கருவிகள் பதிவுசெய்து நம் உடலிலுள்ள குறைபாட்டை வெளிப்படுத்திவிடும்.

ஒரு செயற்கைக் கோளை விண்வெளியின் சுழல் வழியில் செலுத்த வேண்டுமானல், வி னா டி க் கு எட்டு கிலோ மீட்டர்

அதாவது மணிக்கு இருபத்தொன்பதினுயிரம் (29000) கிலோ மீட்டர் விரைவை அதற்குக் கொடுக்க வேண்டும். இது **முதல் விண் வெளி விரைவு** எனப்படும். இனி அதனைப் புவியின் ஈர்ப்புத் திறனிலிருந்து விடுபடச் செய்ய வேண்டுமானுல் செயற்கைக் கோள் விநுடிக்கு 11 கிலோ மீட்டர்களைவிடச் சிறிது கூடுதல் விரைவுடன் இயங்கவேண்டும். இது **இரண்டாம் விண்வெளி விரைவு ஆகும்.** இப்படிச் செல்லும் செயற்கைக் கோள் கதிரவன் மண்டிலத்திலுள்ள எந்த இயற்கைக் கோள்களுக்கும் பறந்து செல்ல இயலும். விநுடிக்குச் சற்றேறத்தாழ 17 கிலோ மீட்டர் என்பது **மூன்றும் விண்வெளி விரைவாகும்.** இந்த விரைவில் செலுத்தப்பெறும் செயற்கைக்கோள் அல்லது விண் கப்பல் கதிரவன் மண்டிலத்தை விட்டே அகன்று வான் வெளியின் வேறு உடுக்களை நோக்கிச் செல்லும் ஆற்றல் பெற்றுவிடும்.

இத்தகைய விரைவை ஒரு விண்வெளி மறவன் தாங்கிக் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி இவற்றைப் பற்றி நன்கு அறியவும், பழக்கப்படவும் செய்தோம்.

இயக்கம் ஒரே நிலையான விரைவில் அமைந்திருந்தால் அது எவ்வளவு மிகுதியாயினும் அதனுல் உடலுறுப்புக்கள் சேதமுறமாட்டா. நொடிக்கு ஏறத்தாழ முப்பது கிலோ மீட்டர் விரைவில் நிலவுலகம் கதிரவனைச்சுற்றி வருவதை நாம் உணர்வதேயில்லை. 'இந்நிலவுலகத்தைச்சுற்றி வளி மண்டிலம் பெருங் காப்பாக அமைந்திருப்பதே இதற்குப் பொருட்டாகும். ஆனுல் எத்தகைய விண்வெளி அழுத்தத்தையும், மையம் நீங்கு விசைப் பொறியில் பயிற்சி பெற்றதால், தாங்கும் ஆற்றல் பெற்றுவிட்டோம்.

இனி அடுத்தபடியாக எங்களுக்கு வேண்டியிருந்தது அமைதியைக் கடக்க வேண்டிய பயிற்சியே. விண் வெளியில் காற்றில்லை. எனவே ஒலியும் பரவாது. விண் வெளியிலிருக்கும் பொழுது காதருகே குண்டு வெடித்தாலும் நமக்குத் துளியும் கேட்காது. விண் வெளியிலிருக்கும் இந்தச் சாக்காட்டு அமைதி மாந்தனுக்கு ஓர் அஞ்சத்தக்க எதிரியாகும். அமைதியில் தனித்து ஒதுங்கி இருக்கும்பொழுது உள்ளத் தென்பை இழந்து விடாமல் இருக்க மருத்துவர்கள் எங்கட்குப் பயிற்சியளிக்கத்

தொடங்கினர். சுற்றிலும் அமைதியாக விருப்பதால் நமக்கு தொல்லேயில்லேயே; அருமையாகப் படுத்துறங்கலாமே என்று சிலர் நினைக்கலாம். ஆனல் நாங்கள் அங்குத் தூங்குவதற்காகச் செல்லவில்லேயென்று உங்கட்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட அளவே தூங்கலாம். வேலே அட்டவணையில் குறித்த நேரத்தில் எழவேண்டும். பொறிகளின் இயக்கங்களேக் கண்டு குறித்தல் வேண்டும். இத்தகைய வேலேகளே மன ஊக்கம் குன்ருமல் அந்த அமைதியான வெளியில் செய்வதற்கு நாங்கள் பழக்கப் படுத்தப்பட்டோம்.

இதற்கெனச் 'செவிட்டு அறை' என வியப்புப் பெயர் கொண்ட ஓர் அறை மருத்துவ நிலேயத்தில் உள்ளது. மிகப் பெரிய கட்டிடத்தில், அதிர்வைத் தாங்கிக்கொள்ளும் வகையான மென்மையான கடற் பஞ்சு போன்ற அடித்தளத்தின் மேல் இந்த அறை அமைக்கப்பட்டுள்ளது. அறையின் தரையும், மேல்தளமும், சுவர்களும் மங்கிய நிறமுள்ள இழுவை (Rubber) போன்ற பொருளால் மூடப்பட்டிருந்தன. விண் வெளிக் கப்ப லில் இருப்பதைப் போன்ற நாற்காலி ஒரு மூலேயில் இருந்தது. அதற்கருகில் விசைக் கட்டுப்பாட்டுப் பலகையும், வானெலி வாங்கிகட்கும் ஒலிச் செலுத்திகளுக்குமான சொடுக்கிகளும் இருந்தன. சுவர்ப் பேழையில் பல நாட்களுக்குத் தேவையான உணவும் மணி காட்டியும் வைக்கப்பட்டிருந்தன. மணிகாட்டி ஓடினுலும் ஒலியெழவில்லே. என்னே அந்த அறையில் தள்ளி வலிவான கதவுகளே மூடி அடைத்துவிட்டனர். அறையின் உள்ளிருந்து ஒலிச் செலுத்தி வழியாக வெளியிலிருந்த மருத்துவர் களோடு தொடர்பு கொள்ளலாம். இவ்வகையில் திட்டமிட்டபடி அங்கிருந்த நுட்பப் பொறிகளில் உள்ள குறியீடுகளில் இருந்த மாற்றங்களே நாளும் குறித்துக் கொள்ளுவது என் தலேயாய வேலேயாகும். சில நேரங்களில் உடற் பயிற்சி செய்வேன். சிற்சிலகால் படிப்பேன். நூற்பயிற்சிகளிலும் நேரம் கழிந்தது. அறையில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் இருந்தன. இவற்றைக் கொண்டு அந்த அறையில் நானே உணவைச் சமைத்துண்ண வேண்டியிருந்தது. உள்ளிருந்து நான்தான் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தேனே தவிர, வெளியில்

இருந்து எச்செய்தியும் எனக்குக் கிடைக்கவில்லை. நுட்பப் பொறியிலிருந்த குறியீடுகளையும், என் உடல் நிலை பற்றியும், அறையிலிருந்தவற்றின் ஈர வெப்ப நிலைகளையும் குறிப்பிட்ட நேரப்படி தொலைவரி வழி மருத்துவர்கட்கு அனுப்பிக் கொண்டிருந்தேன்.

எண்ணுவதற்கு எவ்வகைப் பொருளுமின்றி எவருமற்ற சூழ்நிலையில் மூளைக்கு வேலை கொடுக்காமல் மாந்தன் தனியாக இருந்தானாகில், விரைவில் அவன் துயர்க்கு இரையாவான். இந்த அஞ்சத்தகு சூழ்நிலையில் விண்வெளி மறவன் சோர்வடையக் கூடாது என்பதே ''செவிட்டறை''ப் பயிற்சியின் நோக்கமாகும். வரைமுறையாகச் செய்கின்ற வேலை நேரங்கள் போக மீதிஉள்ள நேரங்களில் ஓவியங்களை வரைந்தேன். நான் உள்ளிருந்து செய்கின்ற ஒவ்வொரு வேலையையும் வெளியிலிருந்த மருத்துவர்கள் தொலைக்காட்சி வழி கண்டு மகிழ்ச்சியடைந்ததாகப் பின்னர் கூறினர்.

15-நாட்களுக்குமேல் செவிட்டறையிலிருந்து தாடியும் மீசையுமாக வெளி வந்தேன். இத்தகைய வியத்தகு பயிற்சிகளில் எல்லாம் தேறி வந்தபின், விண்வெளிக்கு எங்களை அனுப்பி வைக்கும் கப்பலை எங்கட்குக் காட்டினார்கள். கப்பலுக்குள் ஏறிச் சென்றபோது உணர்ச்சி வயப்பட்டேன். ''செட்'' ஊர்திகளில் உள்ள அறைகளைவிட விண்வெளிக் கப்பலின் அறைகள் அகன்றிருந்தன. வாகு நிறைந்த மெத்தென்ற நாற்காலி ஒன்று இருந்தது. இடப்புறம் விசைக்கட்டுப் பாட்டுப் பலகையும் எதிரில் திசை திருத்தப் பொறியும் சிறிய உலக உருண்டையும் இருந்தன. உலக உருண்டைக்குள் பல நுட்பமான நுண்ணிய விசைகள் பொருத்தப்பட்டிருந்தன. கப்பல் விண்வெளியில் பறக்கும்பொழுது, குறிப்பிட்ட நேரத்தில் அது உலகத்தின் எந்த இடத்திற்குமேல் பறந்து கொண்டிருக்கிறது என்பதைத் துல்லியமாகக் காட்டும். அங்குள்ள நாற்காலியில் சில நொடிகள் அமர்ந்து களிப்புற்றேன். கப்பலைப்பற்றியும் உலகத்துடன் கப்பலைத் திசை பொருந்த இயக்குவதுபற்றியும், நுண்பொறிகள் இயங்காமல் போய்விட்டாலும், தனியாக நாங்களே கப்பலைச் சரியானதிசையில் ஓட்டவும், குறித்த நேரத்தில்

அதனை இவ்வுலகத்தில் குறிப்பிட்ட இடத்தில் இறக்கவும் பயிற்சியளிக்கப்பட்டோம்.

கப்பலில் செய்ய வேண்டிய மாறுதல்களைப் பற்றிப் பறக்க விருக்கும் எங்கள் விருப்பத்தைக் கப்பல் அமைப்பு வல்லுநர் கேட்டறிந்து, அதற்குத் தக்க சில மாற்றங்கள் செய்ய இசைந்த னர். விரிந்த விண்வெளிச் செலவிலிருந்து மீள்கையில் எல்லை யற்ற விரைவில் கப்பல் அடர்த்தியான வளி மண்டலத்துள் நுழையும். அக்கால் கப்ப லின் வெளிச் சுவர் ஆயிரக் கணக்கான பாகைகள் சூடேறிவிடும். நிலத்திலி ருந்து பார்த்தால் ஒரு பெரிய தீஉருண்டை நம்மைநோக்கி வருவதுபோல் தோன்றும் இந்தச் சூட்டினல் கப்பல் உருகிஎரிந்துவிடாது. வெளி வெப்பம் சிறிதும் உள்ளேபர வாது. கப்பலின் சுவர் இத் தகைய தடுப்புத்திறம் பொருந்திய தனி மாழை (உலோக)த் தகட்டால் ஆனது. கப்பலில்உள்ள ஒவ் வொரு நுட்பப்பொறியையும் இயக்கும் வகையினைக் கேட் டறிந்தோம். விண்ணுக்கு என்னைச் செலுத்த வேண் டிய அந்தநாள் விரைவில் வரக்கூடாதா வென்று ஏங்கினேன். இறுதியில் அந்த நாள் வந்தது. கப்பலில் உள்ள நுண் பொறிகளையும், இயக்கிகளையும் மீண்டும் சரிபார்த்துக் கொண்டேன். நாற்காலியில் வாகாக உட்கார்ந்து கொண்டு தலையைப் பின்புறம் உறுதியாக வைத்தேன். குறித்த நேரத்தில் பொறிகள் முடுக்கப்பட்டன. எல்லாம் அதிர்ந்து குலுங்கியது. கோளெய்தி மேலே சென்றது. சில நொடிகளில் அதன் முதற் கட்டம் பிரிந்துவிட்டது. பின்னர் இரண்டாம் மூன்றும் கட்டங்

ஒற்றுமைக்கு ஒரே மொழி வேண்டும் என்பதில்லை.

"நாட்டு ஒற்றுமைக்கு ஒரே மொழிதான் இருக்கவேண்டும் என்பதில்லை. மொழி, உணவு, உடை, பழக்க வழக்கங்கள் எல்லாம் ஒரே வகையாய் இருக்க வேண்டும் என்பது இன்றியமை யாததன்று. வேற்றுமை இல்லா விட்டால் ஒற்றுமை இயலாது. இந்தப் பரந்த நாட்டில் வேற்று மைகள் இருப்பதை ஏற்றுக் கொள்ளாதவரை ஒற்றுமை ஏற் பட இயலாது"

—என்று நடுவனரசு அமைச்சர் திரு சி.சுப்பிரமணியம்ஒருசொற் பொழிவில் குறிப்பிட்டுள்ளார்.

களும் பிரிந்தன. இறுதியில் எங்கும் ஓரே அமைதி. துவக்கத்தில் நான் எந்த நிலையில் இருந்தேன் என்பதை என்னால் உரைக்க முடியவில்லை. சில நொடிகள்தாம், பின் எல்லாம் தெளிவாயின. கடைக்கண்ணால் கப்பலின் பலகணி வழியே பார்த்தேன். வியக்கத்தக்க வண்ண வரிசைகள்! சொற்களால் விளக்க வியலாத காட்சி! இத்தகைய அருமையான காட்சியைப் பார்த்தும் பாராட்டிச்சுவைப்பதற்கும் நேரமில்லை. உலகம் எங்கோ ஒரு வெளியில் மிதந்து கொண்டிருந்தது. அங்கிருந்த அறிஞர்களின் உசாவல் கேட்டது. என் வேலையும் தொடங்கியது. உள்ளக் கிளர்ச்சியுடன் கப்பலின் சுக்கானைப் பிடித்தேன். முதலில் தயக்கமாக இருந்தாலும் பின்னர் ஆர்வமுடன் புறப்பட்டேன். கப்பல் எனக்குக் கட்டுப்பட்டது. கப்பலை எத்திசையில் வேண்டுமானாலும் செலுத்த இயலும்போல் தோன்றியது. இந்த உணர்வை எதனுடனும் ஒப்பிடுவதற்கில்லை. அறிவியலைப் பற்றியும் அத்துறை வல்லுநர் பற்றியும் பெருமிதத்தோடு எண்ணினேன். நான் சொல்பவற்றை உலகிலிருப்பவர்கள் நன்றாகக் கேட்டுப் புரிந்து கொள்ளுகிறார்கள் என்பதை அறிந்தவுடன், கப்பலின் இயக்கம் வெற்றியுடன் நடைபெற்றது என்பதையும், எல்லா நுண் பொறிகளும் இயங்கினவென்பதையும் என் மனநிலை மிகவும் சிறப்பாகவுள்ளது என்பதையும், பொதுவுடைமைக்கட்சி நடுவண் குழுவுக்கும், அரசினர்களுக்கும் நிகிதா செர்கியேவிச் குருசேவுக்கும், அறிக்கை செய்தேன். எல்லா உருசிய மக்கட்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். குருசேவின் வாழ்த்துச் செய்தி கிடைத்தது. அடிக்கடி ஒளியும், இருளும் மாறி மாறித் தோன்றின. பல வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. திசை திருப்பிக்காட்டும் எண்களைச் சரி பார்த்துக் கப்பலின் குறிப்புப் புத்தகத்தில் குறிக்க வேண்டும்; வானொலிச் செய்திப் போக்கு வரவின் குறிப்புக்களைக் கணக்கிட வேண்டும். தூங்குவது முதல் உணவு உண்பது உட்படப் பல இன்றியமையா அறிவியல் ஆய்வுகளைச் செய்ய வேண்டும். விண் வெளியில் இதுவே முதல் நெடுஞ் செலவாதலால் இதன் விளைவுகளைக் கொண்டுதான் ஏராளமான புள்ளி விளக்கங்களில் உள்ள தவறுகளைத் திருத்த வேண்டியிருக்கும்.

நிறையற்ற நிலையில் இருக்கும்பொழுது மாந்தனுக்குச் சில வியப்பான உணர்ச்சிகள் உண்டாகின்றன. அவனுக்குத் தன் உடலின் நிறையே தெரிவதில்லை. மேற்கூரையில் தலைகீழாக மிக இயல்பாய் நடக்கலாம். வெற்று வெளியில் தொங்கலாம். காற்றில் மிதந்து நீந்தலாம். இந்நிலையில் சில தொல்லைகளும் இல்லாமல் இல்லை. எடுத்துக் காட்டாக வான வெளியில் நெடுந்தொலைவு செல்வோர்க்கு உணவு உண்ணுதல் ஒரு தலையாய நிகழ்ச்சி. உரொட்டி முதலியன தூளாகி நொறுங்கிவிடுகின்றன. இத்தூள்கள் மூச்சுக் குழற்குள் சென்று அடைத்துக் கொள்ளக்கூடும். நிறையற்ற நிலையில் வாய்க்குள் இட்ட உணவு வயிற்றுக்குள் செல்வதில்லை. இதற்கு அறிவியல் வல்லுநர்கள் சில தீர்வு கண்டனர். சிறு குழாய்களில் அடைக்கப்பட்ட உணவை உண்ணுவது இயலும். அண்ட வெளிக்குத் தகுந்த உணவு சமைத்தல், பிற்காலத்து ஒரு பெருந் தொழிலாகும். கீழ் நாட்டுணவு வகைகளும், பிரஞ்சு உணவுகளும் விண் வெளிக்குப் பயன்படமாட்டா. நிறையற்ற நிலை எனக்கு முற்றிலும் பழக்கப்பட்டது. அஃதாவது உலகத்தை நான் ஐந்தாம் முறை சுற்றிவந்தபோது எனக்கு ஒரு குமட்டல் உணர்ச்சி உண்டானது. இந்த உணர்ச்சி விட்டு விட்டுத் தோன்றியது. அதை அடக்கும் பொருட்டு நாற்காலியில் உட்கார்ந்து சிறிது நேரம் மயங்கிக் கிடந்தேன். குமட்டல் உணர்ச்சி மெல்ல மறைந்தது. கப்பலுக்குள் 65 பாகை வெப்பம் இருந்தது. கொஞ்ச நேரம் வகைப்படுத்தித் தூங்கத் தொடங்கினேன். தூங்குகையில் என் கைகளை என்னால் அடக்க முடியவில்லை. கைகள் மேலே உயர்ந்து, காற்றில் மிதக்கத் தொடங்கும். அவற்றை அடக்குவதற்கு நாற்காலிக் கச்சைகளின்கீழ் நுழைத்துக்கொண்டேன். பிறகுதான் என்னால் நன்றாகத் தூங்க முடிந்தது. ஆனால் நான் உறங்கி விழித்தபோது கைகள் மீண்டும் காற்றில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அங்கிருந்து திரைப்படப் பிடிப்புப் பெட்டியை (Cine Camera) நிலத்தை நோக்கித் திருப்பினேன். அக்கருவியால் நிலத்தைப் பல கோணங்களிற் படம் பிடித்தேன். இப்பொழுது 4,10,000 கிலோ மீட்டர் தொலைவு சென்றிருந்தேன். இந்நிலவுலகில் ஒருநாள் முடிந்தது. இதற்குள் பதினேழு இரவு பகல்களைக் கண் குளிரக் கண்டேன்.

இந்நிலையில் உலகத்திலிருந்து திரும்பிவர இசைவு வந்தது. விரைவைத் தணிக்கும் எய்திகள் சுடப்பட்டதும் மிதந்துகொண்டிருந்த பொருள்களனைத்தும் என் காலடியிற் கிடந்தன. வளிமண்டிலத்தில் உராய்கையில் கப்பலின் வெளிப்பகுதி சூடேறியது. என்னைச் சுற்றிலும் தீப்பிழம்பைக் கண்டேன். இருப்பினும் கப்பற்குள் சூடு உறைக்கவில்லை. நிலத்திலிருந்து சில 'கிலோமீட்டர்' உயரத்தில் நான் தரையிலிறங்கும் நுண்பொறியை இயக்கினேன். நிலம் என்னை நோக்கி வருவதுபோல் தோன்றியது. தரையிற் கால் வைத்தவுடன் என் அண்ட வெளி உடுப்புக்களைக் களைந்தேன். வான் வெளிச் செலவை முடித்துத் திரும்பிய கப்பலைச் சுற்றிப் பார்த்தேன். ஓரிடத்திலும் சற்று நெளிசல் உடைசல் இல்லை. கப்பற் குள்ளிருந்த எல்லாக் கருவிகளும் விசைப் பொறிகளும் நல்ல நிலையில் இருந்தன. உலகிலேயே முதல் அண்ட வெளிக் கப்பலைத் தோற்றுவிக்கத் தம் அறிவையும் ஆற்றலையும் ஈடு கொடுத்த பல்லாயிரக் கணக்கான அறிவியல் வல்லுநரின் ஈகத்தின் விளைவாகத்தான் வான் வெளிச் செலவு உண்மையிற் கை கூடுவதாயிற்று. இதில் ஓர் எடுப்பான இடத்தைப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டினாலும், இப்பணியில் உண்மையிலேயே என்னினும் மிகுதியாக உழைத்த ஆயிரக் கணக்கான அறிவியலறிஞரின் தன்னலமற்ற தொண்டினை எவரும் மறத்தலாகாது.

எழுதுவார்க்கு.

தென்மொழிக்கு அன்பரிடமிருந்து கட்டுரைகளும், பாடல்களும் வந்து குவிகின்றன. அவர்தம் ஆர்வம் கண்டு மகிழ்கிறோம். ஆயினும் அவற்றுள் பலவற்றைத் திருத்தச் செலவிடும் முயற்சியினும் புதியனவாக எழுதி விடுவதே எளிதாகும் போலிருக்கிறது. எழுதுவார் செறிவோடும் தெளிவோடும் சுருங்கக் கூறி விளங்க வைத்தலே நலம். எழுதியவற்றை ஆங்காங்கு நற்றமிழ்ப் புலவர்பால் காட்டித் திருத்தம் செய்த பின்னரே தென்மொழிக்கு அனுப்ப வேண்டுகின்றோம். எழுதுவன தனித் தமிழாகவே யிருத்தல் வேண்டும்.

— ஆசிரியர்.

தொகுதிப் பெயர்.

அம்பலம்—Village Assembly
அவை — Audience.
அவையம் — Jury.
ஆசிடை — Association.
ஆயம் — ssembly.
இல் அல்லது இல்லம் — House.
கடிகை — Village Council
கணம் — Society, host, body
கழகம் — Academy
களம் — Field
களரி — Institute.
பெருங் குறி — Village Assembly
கூளி — Multitude
கூட்டம் — Meeting, Gathering.
தொழுதி — Herd, Flock
தொகுதி — Set, Aggregation
தொகை — Collection Sum.
நெருள் — Big crowd.
பண்ணை — Farm, a bevy of ladies
பொதியில் — Public Hall.
மக்கள் — People.
மந்தை — ஆனிரை, மானிரை
மன்று, மன்றம் — பொதுவிடம், அறங்கூறவையம், அம்பலம்
மாந்தர் — Human beings
மன்பதை — Huminity Mankind
தானை, சேனை — Army.
படை — Division, Force
பதிலம் — Company.
கணகம் — Battalion
மன்பதை — Regiment.
தண்டு — Troop
தார் — போர்ப் படையின் முன்னணி.
கூழை — போர்ப் படையின் முன்னணி.
தூசு, தூசி — கொடி தாங்கிச் செல்லும் கொடிப் படை.
குழு—Faction, Committee.
குழூஉ — Class
குழுமம் — Guild.
குழாம் — Group
குழும்பு — Company.
கும்பு — Gang.
கும்பல் — Croud
குறி — Village Council.
திரள் — Mass
வகுப்பு — Class.

— ஞா. தே.

மணத்தற் கொவ்வேன்!

"இளஞ்சித்திரன்"

பெற்றவரே, வளர்த்தவரே! எனக்கே இக்கால்
பெண்பேசி வந்தவரே! பல்வா றுக
உற்றவளைப் புகழ்கின்றீர்! மணத்திற் கென்றன்
ஒப்புதலைப் பெறவந்தீர்! ஒன்று ரைப்பேன்.
சொற்றெளிவாய்; இசைகூட்டும் அவள்தான் நல்ல
சோலைமலர்க் குயிலென்றீர்! மயிலே என்றீர்!
கற்றவளே என்கின்றீர்! ஆனால் நானோ
கலப்புமணம் ஒன்றிற்கே இசைவேன் காணீர்!

அறிவுடையாள்; குடிஇயக்கும் நற்றி றத்தாள்!
அச்சம்நாண் மடம்பயிர்ப்பு சிறக்கப் பெற்றாள்!
நெறியுடையாள்; விருந்துவக்கும் அன்புச் செல்வி!
நிறைமாட்சி மிகுந்தவளே! என்றன் வாழ்வில்
குறியுடையாள் என்கின்றீர்! உங்கள் தேர்வில்
குறையொன்றும் இல்லை!அவள் எவ்வாற் றானுஞ்
செறிவுடையாள்! ஆனாலும் என்,கு லத்துச்
சேயிழையா யின்,அவளை மணத்தற் கொவ்வேன்!

வட்டமுகம் முழுநிலவே! உடலோ, வஞ்சி
வளர்கொடியே! இருவிழியுங் குவளைப் பூக்கள்!
ஒட்டுயர்மாம் பழக்கன்னம்! இடையோ மின்னல்;
உலவுகுளிர் தென்றல்போல் தழுவுங் கைகள்!
"முட்டியவான் மழைமுகிலோ? இருளோ என்னும்
மொய்த்தகுழல்" என்றெல்லாம் கூறு கின்றீர்!
அட்டியில்லை; ஆனாலும் என்,கு லத்தின்
அணங்கென்றால் நானவளை மணத்தற் கொவ்வேன்!

எழுந்தவெழில் பொங்கிளமைத் தோற்றம்! இன்ப
இயற்றமிழை – இசைத்தமிழைப் பாடும் பூவாய்!
செழுந்தளிர்ப்பூ மென்விரல்கள்! முத்தப் பற்கள்!
செவிகளிரு வள்ளைமலர்! எட்பூ நாசி!
வழுவமையாக் கடைந்தெடுத்த கால்கள்! சங்கின்
வரிக்கழுத்து! மூன்றும்நாட் பிறையே நெற்றி!
ஒழுங்குடையாள்; ஆனாலும் என்,கு லத்தின்
ஒண்டொடியா யின்,அவளை மணத்தற் கொவ்வேன்!



நகைநலம்

(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச் சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றால், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை மாணவர்களும் கற்றறிந்த பெருமக்களும் இப்பகுதிக்கு எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — **ஆசிரியர்**)

தேங்காய்!

புலவர் ஒருவர் ஒரு திருமணத்திற்குப் போயிருந்தார். திருமணம் முடிந்து எல்லாரும் புறப்பட்டனர். வீட்டுக்காரர் போவார்க்கெல்லாம் தேங்காய் பழம் தந்து அனுப்பினர். புலவரிடமும் வந்து அவர், "இந்தாருங்கள் ஐயா, தேங்காய்" என்று கூறித் தேங்காய் ஒன்றைக் கொடுத்தார். புலவர் அதை வாங்கிக் கொண்டு புறப்படலானார். உடனே வீட்டுக்காரர் அவரைப் பார்த்துச், "சாப்பிட்டுவிட்டுப் போகலாமே" என்று அன்பாகச் சொன்னார். உடனே புலவர், "நீங்கள் தேங்காய் கொடுத்துவிட்டீர்கள்; தேங்காய் கொடுத்தபின் இங்கு மேலும் தங்குதல் கூடாது. 'தேங்காய்' என்றால் இங்கு மேலும் தேங்காதே. உடனே போய்விடு; என்று பொருளாகும். இனி இங்குத் தேங்குதல் நல்லதன்று" என்று கூறிப் புறப்பட்டுச் சென்றார். இதனைக் கேட்டுத் தேங்காய் வாங்கிக் கொண்டு சாப்பாட்டுக்கென உட்கார்ந்திருந்தவர்களெல்லாரும் ஒவ்வொருவராகப் புறப்பட்டுச் சென்றனர். இதைக்கண்டு அங்கிருந்த வெளியூர்க்காரர்கள் எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

பயனுள்ள ஒன்று!

காந்தியடிகள், 1931-இல் இங்கிலாந்தில் நடந்த வட்ட மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டுக் கப்பலொன் றிற் சென்றார். கப்பலில் வெள்ளைக்காரன் ஒருவன் அவரை அடிக்கடி இகழ்ச்சியாகப் பேசிக்கொண்டே யிருந்தான். ஒரு முறை அவன் அவரைப் பற்றிப் பகடி (கேலி) யாக ஒரு பாடல் எழுதிக்கொண்டுவந்து அவரிடம் கொடுத்து, ''இதைப் படித்துப் பாருங்கள்'' என்றான். அடிகள் அமைதியுடன் அதை வாங்கிப் பார்த்தார். நான்கைந்து பக்கங்கள் உள்ள அந்தப் பாட்டை மிகப் பொறுமையுடன் படித்துவிட்டு, அந்தத் தாள்களை இணைத் திருந்த ஒரு குண்டூசியை எடுத்து வைத்துக்கொண்டு பாட்டை மீண்டும் அவனிடம் கொடுத்தார். உடனே அவன் சிறிது நகைத்துவிட்டு, ''ஏன் இதில் ப ய னு ள் ள த ா க ஒன்றும் இல்லையா ?'' என்று கேட்டான். ''இருந்ததே! அதைத்தான் எடுத்து வைத்துக் கொண்டேனே!'' என்று அமைதியாகச் சொன்னார். அருகிலிருந்தவர்கள் 'கொல்'லென நகைத்தனர். அவ்வெள்ளையனுக்கு முகம் சுண்டிப் போய் விட்டது.

ஃ ஃ ஃ

'வேலை' விளக்கம்!

ஒருகால் ஓர் அலுவலகத் தலைவர்க்கு ஓர் இளம் பெண்ணிட மிருந்து ஒரு மடல் வந்தது; அதில் அவள் அவர்க்கு உள்முகச் செயலர் (Personal Secretary) - ஆகத் தான் இருக்க விழைவ தாகக் குறித்திருந்தாள். மேலும் தான் அவர்பால் சுருக்கெழுத்து எடுத்தல், தட்டச்சு (Type) அடித்தல், கோப்புச்(File)செய்தல் இன்னும் அவர் விரும்பும் எந்த வேலையும் செய்ய முடியுமென்று குறிப்பிட்டுவிட்டு, அவள் மேலும் ''**எந்த வேலையும்** என்றால், **எந்த வேலையும்**'' என்று எழுதியிருந்தாள்.

அலுவலகத் தலைவர் திருமணமானவர். அந்த மடலைத் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டார். உடனே அவர் மனைவி அந்த இளம் பெண்ணுக்குக் கீழ்வருமாறு ஒரு மடல் எழுதிப் போட்டாள்; ''இவர்க்கு ஏற்கனவே ஓர் அருமையான உள்

முகச் செயலர் இருக்கின்றுள். அவள் சுருக்கெழுத்தெடுப்பாள்; தட்டச்சு அடிப்பாள்; கோப்புச் செய்வாள்; அத்துடன் அவர் விரும்பும் எல்லா வேலைகளையும் செய்வாள்; ''எல்லா வேலை களும் என்றுல் எல்லா வேலைகளும்''

– (Reader's Digest)

ஃ ஃ ஃ

பயன் மறந்த பேச்சு!

அறிவியல் மெய்யறிஞர், ஆல்பர்ட் ஐன்ஃச்டீன் ஒரு கால் நில நடுக்க ஆராய்ச்சி அறிஞர் ஒருவருடன் பேசிக் கொண்டி ருந்தார். எவ்விடத்தில் நில நடுக்கம் ஏற்பட்டாலும் உடனே அறிந்து கொள்ளத் துணை செய்யும் ஒரு பொறியமைப்பைப்பற்றி இருவரும் ஆழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

இடையில் ஐன்ஃச்டீனுக்குத் தம் மனைவியின் நினைவுவரவே அருகில் அவள் தங்கியுள்ள ஓர் உணவு விடுதிக்குச் சென்றுர். உணவு விடுதியில் ஒரே குழப்பமாக விருந்தது. அவர் நேரே தம் அறையில் நுழையவே அவள் மயக்கமுற்று நாற்காலியிற் சாய்ந்திருந்ததைக் கண்டார். உடனே அவர் அங்கிருந்தவர் களை, ''என்ன நடந்தது?'' என்று பரபரப்புடன் கேட்டார். ''என்ன, சற்றுமுன் ஏற்பட்ட நில நடுக்கத்தை நீங்கள் அறிய வில்லையா?''என்று அனைவரும் அவரைக் கேட்டனர்!

எண்கட்கும் மாந்தர் வாழ்க்கைக்கும் உள்ள
தொடர்பு பற்றி விளக்கும் கணிய நூற்கள்

The Romance of Numbers

(Price Rs. 4—00)

" அற்புத எண்கள் "

(Numerology in Tamil)

விலை. உருபா. 2–50.

எழுதியவர்:– R. நடேச பிள்ளை, பி. ஏ., பி. எல்.
வழக்கறிஞர், கடலூர் புதுநகர்.

வேண்டுவோர் ஆசிரியர்க்கு எழுதிப் பெறுக.

நினைவில் வைப்பாய்

நீபெற்ற வெற்றியெல்லாம் இயல்பே என்று
நினைத்துக்கொள்; செருக்குளதேல் உடனே போக்கு.
நீமிக்க அறிவாளன் என்கின் றேன்யான்;
நேர்வழியில் இதைப்பிறர்க்கு நிறுவிக் காட்டு.
நீதொட்ட செயலெல்லாம் சிறக்கும். அங்கே
நிலைக்கேடு வந்தாலும் கவலை வேண்டாம்.
நீவிட்ட குறைச்செயலை நிறைவு செய்ய
நெடுவழியில் உன்பின்னால் வருவார் மக்கள்.

பொறைகொள்க! நிறைகொள்க! அச்சந் தீர்க!
புலனெல்லாம் வலிகொள்க! ஆணை செய்க!
துறைகொள்க; அத்துறையில் முழுமூச் சோடு
தொடர்ந்துபணி யாற்றுவதால் வெற்றி கொள்க.
முறைகொள்க எச்செயலும் முறையி னால்தான்
முன்னணியில் நின்றுமிக அழகு சேர்க்கும்.
நிறை கொள்க; எப்போதும் நேர்மை கொள்க.
நெறியினையே உன்னுருவில் உலகு காண்க.

மயங்காதே வெற்றிக்கே வழிகள் சொன்னேன்.
மனத்தினிலே தெளிவிருந்தால் விளக்க மாகும்.
தயங்காதே நேர்வழியில் நடப்ப தற்கு!
தளராமல் நடந்திடுக வெற்றி கொள்வாய்.
இயங்காமல் இருப்பாயேல் இழிவு நேரும்!
இகழ்நீக்கிப் புகழ்காண்க! மக்கள் வேட்கும்
நயங்கொள்க! துணிவுடனே எதிர்கா லத்தை
நாடியுன்றன் தலைதூக்கி நடத்தல் வேண்டும்.

சிலர்க்கேனும் தெளிவூட்ட முயலல் வேண்டும்.
தீமைக்கு விலங்கிட்டு விலக்கல் வேண்டும்.
கலக்கமுற வேண்டாம்;உன் அச்சம் தீர்க;
கலங்காமல் முதலில்நீ தெளிதல் வேண்டும்.
துலக்கமுற உன்னுளத்துச் சுடரைக் கண்டு,
சுடர்தந்த வலிமையினால் உலகுக் கெல்லாம்
விளக்கமுறச் செம்மையினை உணர்த்தல் வேண்டும்.
மிகப்பெரிய கடமையிது நினைவில் வைப்பாய்.

புலவர். பொன். கோதண்டராமன்.

தழுவல்.

அன்பு செய்பவர் அன்பு செயப் பட்டாரைத் தழுவுவர். தழுவலாவது கலந்தணைதல்.

உறுதல் = தழுவுதல்.

(உள்) – அள் – அளை – அணை. அணைத்தல் – தழுவுதல் அளைதல் = தழுவுதல். அணைதல் = தழுவுதல். அணை = நீரை அணைத்தல்போற் கட்டும் கரை.

வாய்க்காலிற் பக்கமாக வழிந்தோடும் நீரை மண்ணிட்டுத் தடுத்தலை அணைத்தல் என்பர் உழவர்.

(சுள்) – செள் – செரு – சேர், சேர்தல் = அணைத்தல் சேர்ந்து கட்டுதல் என்பது வழக்கு.

(துள்) – தழு – தழுவு.

புல்லுதல் = தழுவுதல்.

முள் – முழு – முழுவு. முழுவுதல் – தழுவுதல்.

'தழுவி முழுவி' என்பது வழக்கு.

முள் – முள்கு. முள்குதல் = தழுவுதல். முள் – (முய்) – முயங்கு. முயங்குதல் = தழுவுதல். முயங்கு – முயக்கு – முயக்கம்.

முள் – (மள்) – மரு – மருவு. மருவுதல் = தழுவுதல்.

மரு – மருமம் = தழுவும் மார்பு. மரு – மார் – மார்பு.

மருமம் – மம்மம் – அம்மம் = முலை, முலைப்பால்

(முளாவு) – விளவு. விளவுதல் = கலத்தல், தழுவுதல், விளவு – விளாவு – வளாவு.

ஞா. தே.

"முதல் தாய் மொழி".

சிறு கதை.

அதுவும் காசுக்காக.

(மாரி-அறவாழி)

" ... விட்டு விடுங்க ஐயா! சின்னப் பையன் ... போய்த் தொலேகிருன்......"

"நீங்க பேசாமெ இருங்க ... எவ்வளவு திமிர் தெரியுங்களா இவனுக்கு ... ஒரு நாளா இரண்டு நாளா ... படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கிறேன் ... கொஞ்சமாவது நெஞ்சிலே அச்சமிருந்தா, மீறிகிட்டு செய்வாஞ......"

இப்படிக் கூறிவிட்டுத் தன் பிடிக்குள் சிக்கி நின்ற எலும்புச் சிறுவனே முரட்டுத் தனமாக அடித்து நொறுக்கினுன் அந்தக் கொடுவாள் மீசைக்காரன்.

பையன் கதறித் துடித்தான். என்ஞல் அதற்கு மேலும் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியவில்லே.

"...சரி சரி!... மன்னித்து விடுங்க ஐயா! என்னவோ அறியாப் பயல், தெரியாமல் செய்துவிட்டான்..."

"...இவஞ அறியாப்பயல்?... இவனுக்கா இரக்கம்; நீங்களே பாருங்க ..அந்த வாயில்லா உயிருங்க இவனே என்ஞ பண்ணிச்சு? அரக்கப் பயல்...அதுகளேப் போட்டு அடிஅடின்னு அடிக்கிருனே......"

மீசைக்காரன் காட்டிய இடத்தைப் பார்த்தேன்; அங்கே பத்துப் பதினேந்து வெள்ளாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

பையன்மேல் எனக்கும் சினம் பொங்கியது. வாயில்லா அந்த ஆடுகளே இவன் ஏன் அடிக்கவேண்டும்? ... குறும்புக் காரன்.....: படட்டும்!...

மீசைக்காரன் பால் எனக்கு ஒரு வகை மதிப்பு உண்டாயிற்று. ஆள் பார்ப்பதற்கு முரடஞக இருந்தாலும் அவனுள் தான் எவ்வளவு மென்மையான உள்ளம் அமைந்திருக்கிறது!

நகர்ந்தேன். மீசைக்காரனும் பையனே விட்டு விட்டான். அவன் ஆடுகளே நோக்கி ஓடிஞன்.

அடுத்த நாள் காலை.

காய் வாங்கி வருவதற்காக அங்காடிக்குச் சென்றிருந்தேன். வாங்கிக் கொண்டு திரும்புகையில் புலால் உண்ணும் நண்பர் ஒருவர் எதிரில் வந்தார். வந்தவர் என்னைத் தடுத்து,

"வாருங்கள்... நானும் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன். இருவரும் சேர்ந்து போகலாம்......" என்று கூறி என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். இருவரும் புலால் கடைக்குச் சென்றோம்.

நான் அந்தக் கடைக்காரனைப் பார்த்துத் திகைத்து நின்றேன்.

அவன் வேறு யாருமன்று; நேற்று நான் கண்ட இரக்க நெஞ்சம் படைத்த மீசைக்காரன்தான்!

"அடடா! கறிக்கடைக்காரனா இவன்?... இவனுக்கா அவ்வளவு இரக்கம்!... ஆடுகளை உயிரோடு கொலை புரியும் இந்த முரடனுக்கா வாயில்லா உயிர்களின்மேல் அத்துணை அன்பு!"

வியப்புடன் நின்றிருந்தேன். கடைக்காரன் ஒரு ஆட்டுத் தொடையை வெட்டி எடுத்து எடை போடப் போனான்.

நண்பர் அதற்குள் குறுக்கிட்டு "அது வேண்டாம் ஐயா!... நோய் பிடித்த ஆடுபோல் இருக்கிறது! கறி எப்படியோ தடிப்புத் தடிப்பாய் கன்றிப் போயிருக்கிறதே..." என்று கூறினார். அதற்கு அவன்,

"...இல்லீங்க! ... கறியிலே ஒரு குத்தமும் இல்லீங்க ...... நல்ல ஆடுதான்!... நேத்து நம்ம வேலைக்காரப் பயல் மேய்க்கும் போது இந்த ஆட்டைக் கழியாலே அடிச்சிட்டான். அதனாலே தான் கறி கன்னிப்போய்த் தடிப்பாய் இருக்குது...... மத்தப்படி நோய்கீயெல்லாம் ஒன்னுமில்லைங்க......"

கறியை வாங்கிக்கொண்டு நண்பரும் நானும் நடந்தோம். அப்போதுதான் எனக்குப் புரிந்தது, கறிக்கடைக்காரன் கூடத் தான் அறுக்கப்போகும் ஆட்டிடம் ஏன் இரக்கம் காட்டுகிறான் என்று!

இந்த உலகில் எல்லாமே காசுக்காக இருக்கும்போது இரக்கம் மட்டும் சும்மா கிடைத்துவிடுமா?

நிலவுருண்டை பற்றிய சில குறிப்புகள்.

மண்ணுலகின் அகவை மதிப்பீடு	— குறைந்தது 450 கோடி ஆண்டுகள்.
மேற்பரப்பு	— 19,69,50,000 கற்பெருக்கம்.
நிலப்பகுதியின் பரப்பு	— 5,75,10,000 கற்பெருக்கம்.
நீர்ப்பகுதியின் பரப்பு	— 13,94,40,000 கற்பெருக்கம்.
குறுக்குச் சுற்றளவு	— 24,902 கற்பெருக்கம்.
நெடுக்குச் சுற்றளவு	— 24,860 கற்பெருக்கம்.
கொள்ளளவு	— 26,000,00,00,000 கற்பருமம்.
திறை	— 5887613230000000000000 'டன்'கள்.
ஆண்டுதோறும் நிலம் தன்னை நோக்கி இழுத்துக்கொள்ளும் விசும்பணுக்கள் (Cosmic dust)	— 14.9. 'டன்'
நிலத்தின் மிகவுயர்ந்த முகடு எவரெஃச்ட்	— 29,028 அடிகள்.
நிலத்தின் மிகத் தாழ்ந்த குழிவு பாலத்தீனத்தில் சாக்கடற்கரை	கடல் மட்டத்தின்கீழ் 1286 அடி.
மிக ஆழ்ந்த கடற்பகுதி பிலிப்பைன் அருகிலுள்ளது	,, 36,198 அடி.
உலகம் கதிரவனை ஒருமுறை சுற்றுவதற்குப் பிடிக்கும் காலம்	365-நாள் 5-மணி 48-மணித்துளி 46-நொடி.
உலகம் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளப் பிடிக்கும் காலம்	23-மணி 56-மணித்துளிகள்.
உலகம் கதிரவனைச் சுற்றிச் சுழல்கையில் எய்தும் விரைவு	மணிக்கு 66,600 கற்கள்.
உலகம் தன்னைத்தானே சுற்றிக் கொள்கையில் எய்தும் விரைவு	மணிக்கு 1,000 கற்கள்.

குறிப்பு: கற்பெருக்கம். – ஒரு கல் நீளமும் ஒரு கல் அகலமும் கொண்ட நிலத்தின் பரப்பு. (Sq. Mile)

கற்பருமம் – ஒரு கல் நீளம், ஒரு கல் அகலம், ஒரு கல் உயரம் கொண்ட நிலப்பகுதியின் பரும அளவு. (Cubic Mile)

இலக்கியங்களில்

புலால் உணவு.

இன்பம் துன்பம் இவ்விரண்டும் விரவிக் கிடக்கும் வாழ்க்கையை நம் முன்னோர் பல்லாற்றானும் சுவைத்துள்ளனர். உணவும் உடையும் உறையுளுமே புறவாழ்க்கைச் செம்மைக்குச் சான்றாய் அமைவன. உணவுச் சுவை நுகர்வதிலும் நந்தமிழர் நன்கு ஈடுபட்டிருந்தனர். புலால் உணவைப் பழந்தமிழ் மக்கள் பெரிதும் விரும்பி ஏற்றிருக்கின்றனர். "என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே" (புறம்; 235) என்னும்போது ஔவையார் ஊன் உணவை மெச்சிப்பேசுகிறார். அந்நாள் தமிழர் ஆடு, கோழி, மீன், மாடு, மான், முயல், உடும்பு, நண்டு, பன்றி, ஆமை, ஆகியவற்றின் ஊன் வகைகளையெல்லாம் உண்டுள்ளனர். ஊனைப் புழுக்கியும், பொரியலாய் வறுத்தும், துவையலாய் அரைத்தும், நிணமாய்ப் பெய்தும், நெருப்பிடைச் சுட்டும், கறியொடு கலந்தும் உண்டனர்.

புலவர். சீனி. சட்டையப்பன்.

ஆட்டிறைச்சி:-

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் தம்மரசன் இறந்துபட்ட காலை அவன் இறப்பை எண்ணிப் பாடுகின்றார். "நெய்கான்ற உலையில் **ஆட்டிறைச்சி** சொரியப்பட்டது; மதத்தான் மயங்கிய யானை நெட்டுயிர்த்தாற் போன்று அதனின்று ஓசையெழும்பியது. அதைப் புதிதாய் வந்தவரின் ஒளி மழுங்கிய கண்கள் நிறையவும், குடர் நிறையவும் உணவாக அளித்தான். இன்று போய்விட்டானே" என்னும்பொருள்பட

"மையல் யானை அயா உயிர்த்தன்ன
நெய்யுலைச் சொரிந்த மையூன் ஓசை
புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆர"

என வரும் (புறம் 261) பாட்டில் ஆட்டிறைச்சியைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

கோழியிறைச்சி:-

தொண்டைமான் இளந்திரையனிடம் சென்று பரிசில் பெற்றுத் திரும்புகிறுன் பெரும்பாணன் ஒருவன். எதிர்ப்பட்ட வறியபாணன் ஒருவனைத் தொண்டைமானிடம் ஆற்றுப்படுத்து கிருன். அப்போது ''மருத நிலக் குடியிருப்புகளில் தங்குவீர்க ளாக! அங்குத் தொழில் ஒழிந்திராத வினைஞரால் விளைக்கப் பெற்ற வெண்ணெற் சோற்றுடன் மனைக்கண் உறையும் பெட்டைக் கோழிப் பொரியலும் பெறுவீராக!'' என்கிருன்.

மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்'
(பெரும்பாண்: 254-56)

மீனிறைச்சி:-

அவ்வாற்றுப் படையிலேயே ''நெய்தல் நிலக் குடியிருப்பு களில் தங்குக! இளமையற முற்றிய, விரலாலே அரிக்கப்பெற்ற வெங்கள்ளை உண்க! அத்துடன் உலராத மீன் சூட்டினையும் உண்டு களிக்க!'' என்கிருன்.

வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீர் அரியல் விரல் அலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகு விர்''
(பெரும்பாண் 280-82)

மானிறைச்சி:-

வல்வில் ஓரி என்னும் வள்ளியோன் ஒரு காலை வேட்டஞ் சென்றிருந்தான். காட்டு வழியில் வறுமையால் உழன்ற வன்பரணரையும், அவர் கூட்டத்தையும் கண்டான். அவர் கட்கு, வேட்டத்தால் விளைந்த நிணத்துடன் கூடிய மான் கறி யைத் தந்தான். இன்னும் களைப்புத் தீர ஆநெய் உருக்கன்ன நறவையும் அளித்தான்.

தான் உயிர் செகுத்த மான் நிணப் புழுக்கோடு
ஆன் உருக்கன்ன வேரியை நல்கி''. (புறம்; 152)

மாட்டிறைச்சி:-

தான் தங்கிய எயினர் குடியிருப்பைப் பற்றிக் கூறுகிறுன் பெரும்பாணன் மற்றப் பாணனுக்கு. ''நீ அங்குச் செல்க. கைப்பொருளை வௌவும் களவேர் வாழ்க்கையை உடையவர்கள் அம்மறவர்கள். பகைப்புலம் சென்று, ஆநிரை தந்து, கள்ளுக்கு விலை போக்குவர். இல்லில் அட்ட தோப்பி எனும் கள்ளைப் பருகுவர். உடன் யாவரும் மன்றிடைக் கூடிக் கொழுத்த காளையை அடித்துத் தின்று ஆடுவர்'' என்கிருன்.

''இல்லடு கள்ளின் தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி''
(பெரும்பாண்; 142-43)

எனவரும், பாடலில் அச்செய்தி கூறப்பெறும்.

முயலிறைச்சி:-

ஆலந்தூர் கிழார் சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடுகையில் அவன், பாண் சுற்றத்தினருக்குப் புற வினது முட்டை போன்ற வரகரிசியைப் பாலுலையில் பெய்து, அடப்பட்ட சோற்றினை ஈவான். அத்துடன் குறிய முயலினது கொழுவிய சூட்டிறைச்சியைத் தின்னத் தருவான்''என்கிறார்.

புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்
குறு முயல் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கல்''
(புறம். 34)

உடும்பிறைச்சி:-

தங்கால் பூட்கோவலனர் எனும் புலவர், வேட்டச் சிருர் மிகத் தொலைவு செல்லாமலேயே தம் கருவியால் கொண்ட குறுகிய கால்களை உடைய உடும்பினது விழுக்கு நிணம் பெய்த கூழைப்பற்றிக் குறிப்பிடுகின்றார்.

வேட்டச் சிருர் சேட்புலம் படராது
பட மடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம்பெய்த தயிர்க்கண் மிதவை''
(புறம். 326)

நண்டிறைச்சி:–

ஓய்மா நாட்டு நல்லியக் கோடனித்துப் பரிசில் பெற்ற சிறுபாணன் பரிசில் பெறும் பாணன் ஒருவனை அவனிடம் ஆற்றுப் படுத்துகிறுன். "மருத நிலக் குடியிருப்புக்குச் செல் வாயாக! அங்கு உழவர் இல்லங்களில் வெள்ளிய சோற்றுடன், பிளந்த கால்களை உடைய நண்டுடன் பீர்க்கங்காய் கலந்த கலவையைப் பெறுவாய்" என்கின்றுன்.

"அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்"
சிறுபாண்; 194–95)

பன்றியிறைச்சி:–

ஓய்மான் வில்லியாதன் கொடைச் சிறப்பைப் புறத்திணை நன்னுகனுர் புகழுங்காலை "நாளும் வருவார்க்குப் பசி போக்கக் குறுகிய கால்களை உடைய ஆண் பன்றியினது கறியை நெய்யில் வறுத்து நாடொறும் சோறிடுவான்" என்கிருர்.

குறுந்தாள் ஏற்றைக் கொழுங்கண் அவ்விளர்
நறுநெய் உருக்கி நாட் சோறீயா" (புறம்-*379*)

ஆமையிறைச்சி:–

கோப்பெருஞ் சோழன் நாட்டைப் பிசிராந்தையார் சிறப் பிக்கும்போது "போர்த் தொழில் புரியும் மறவர் விரும்பத்தக்க மதுவை உண்பர். அத்துடன் ஆமையிறைச்சியை வேட்கை தீரத் தின்பர். அதனுல் மயங்கிச் செய் தொழில் மறந்திருப்பர்" என்கிருர்.

"களமர்க்கு அளித்த விளையல் வெங்கள்
ஆமைப் புழுக்கின் காமம்வீட ......
வைகு தொழில் மடியும் *(புறம்-212)*

புலால் உணவை மிக விரும்பி யுண்டவர் மன்னரும், மறவருமே! மறம் மிகுதியாகச் சிறப்பிக்கப்பட்ட அக்காலத்தில் மறத்தன்மையையும், உடல் உரத்தையும், ஒருங்கு வளர்த் தற்குப் புலால் உணவே சிறப்பென எண்ணி மேற்கண்டவற்றை ஏற்றுக்கொண்டனர் போலும்!

தாளிகையின் உரிமை அறிக்கை.

(நடுவனரசு செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956 – 4-ஆம் வகுப்பு, 8-ஆம் கட்டளைப்படி)

1.	வெளியிடுமிடம்:	திருப்பாதிரிப்புலியூர், (தெ. ஆ.)
2.	வெளியிடும் காலமுறை:	திங்கள் ஒரு முறை.
3.	அச்சகத்தார் பெயர், இனம், முகவரி.	பு. சு. கிருட்டிணமூர்த்தி, தமிழர், மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
4.	வெளியிடுவார் பெயர்:	திருவாட்டி: மா. கமலம் (தாமரை) திருவாட்டி: ப. செகதீசுவரி. (உலக முதல்வி)
	இனம்:	தமிழர்.
	முகவரி:	மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
5.	ஆசிரியர் பெயர்:	பெருஞ்சித்திரன்.
	இனம்:	தமிழர்.
	முகவரி:	மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள, தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்.	திருவாட்டி: மா. கமலம். (தாமரை) திருவாட்டி: ப. சகதீசுவரி. (உலக முதல்வி)

தாமரை, உலக முதல்வி யாகிய நாங்கள் இவ்வுறுதி வழி மேலே காணப்பெறும் விளக்கங்கள் யாவும் நாங்களறிந்த வரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிவிக்கின்றோம்.

பங்குனி 1.
14—3—63.

தாமரை,
உலகமுதல்வி,
வெளியிடுவார் கையொப்பம்.

மருத்துவம்

2-மீதூண் விரும்பாமை.

மூவகை உடலியல்புகளையும், அவ்வவற்றிற்கான உணவு முறைகளையும் ஓரளவாக முன்னிதழிற் கூறினோம். இவ்வுணவு முறைகளைப்பற்றியே இவ்விதழில் மேலுஞ் சிறிது விளக்குவோம்.

பல்வகை வினை முறைகளால் இவ்வுடல் இழந்துபடும் உயிர்த்திறனை மேலும் உண்டாக்கித் தரவல்லன உணவும் ஓய்வுமாகும். உணவின்மையால் ஏற்படும் உடல் நோயைப் பசியென்றும், உணவு மிகுதியாலும் ஓய்வின்மையாலும் ஏற்படும் உடல் நோயைப் பிணி யென்றும் கூறுவர். ஆகையால் உணவாலும் ஓய்வாலுமே எல்லாப் பிணிகளையும் வராமற்காத்து இவ்வுடலை ஓம்பினர் தமிழர்.

பொதுவாக எல்லா வகைப் பிணிகட்கும் பாகுபாடற்ற உணவு முறையும், வரை துறையற்ற உணவு மிசைவுமே முழுக் காரணமாகும். இதனாலேயே,

அற்றால் அளவறிந் துண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு

— என்று வள்ளுவர் கூறுகின்றார். முன் உண்ட உணவு, இவ் வுடலின் வல்லியக்கத்தால் விரைந்தோடும் குருதி நீரால் பிழியப் பட்டுச் சத்துப் பொருள் அதனோடு சேர்ந்து பன்னூற்றுக் கணக் கான நரப்புத் தூம்புகளால் உடலெங்குங் கொண்டு போகப்பட்டு வயிறு காலியாகு முன்பே மேலும் மேலும் அவ்வயிறு, பொதி போல் இறக்கப்பெறும் உணவுத் திரளைகளால் நிரம்புதலான், அவ்வுணவு சரிவரப் பயன் கொளுவப் பெறாமல் தங்கி நஞ்சாக மாறி உடற்கு நன்மை பயப்பதற்கு மாறாகக் கேடு பயக்கின்றது.

கழிக்கப் பெறாமல் தங்கி நிற்கும் சாய்க்கடைநீர் சின்னாளில் தீ நாற்றமெடுத்துப் புழுமலிந்து நெளியும் புன்னீராய்ப் போதல் போல், குருதியிலுஞ் சுவராமல், வெளியேயுந் தள்ளப்பெறாமல், அடிக்கடி அளவறியாமல் உண்ணப் பெற்ற நிணமிகுந்த

உணவுத் திரள், அடிவயிற்றுள் தங்கி நஞ்சாகி உடற்குப் பல்லாற்றுனும் பிணி சேர்க்கின்றது.

மாந்தர்க்கு வரும் ஆயிரக் கணக்கான நோய்களிற் பெரும் பாலும் வரையறையற் உணவு கொள்வதால் வருவனவே மிகுதியாம். அடிக்கடி கிடைக்காததும், கிடைப்பினும் அளவிற் சிறியதாகவும், உண்ணவும் போதாததும் ஆன உணவை உண் ணும் ஏழை மாந்தரைவிட, உயர்ந்த உணு வகைகளை அடிக் கடிப்பெற்று, அளவிறந்து உண்ணவும் வாய்ப்புப் பெற்று, அதையே ஒரு தனி நாகரிகமாகக் கொண்டு வெறும் முழு நேரத் தின்னிகளாக உள்ள செல்வர்களிலேயே நோய்வாய்ப் பட்டுச் சாவாய்ப்படும் மக்கள் எண்ணிறந்தோராவர். அவர்கள் தம் உணவிற்குச் செலவு செய்யும் பொருளைவிட மருத்துவர்க்குத் தரும் பொருளே மிகுதியாம் என்பதை அவரே உணர்வர். இருப்பினும் அவ்வடக்கலாகாக் கழிபெறும் உணவுக் காமியர், தம்மைத் திருத்திக் கொள்ள ஒரு சிறிது தானும் முயற்சி செய்வ திலர். இவ்விழி நிலை யுள்ளமும் உடலும் பொருளும் பெற்ற இவரைவிட, உடைமை என்று ஒன்றும் பெருது, தாம் உண்ண வும் உடுக்கவும் ஒரு வாய்க் கவளமும் ஒரு முழக் கந்தையு மின்றித் திரிதரும் ஏழையெளியோர், பலவகையாலும் இன்பமும் மனவமைதியும் கொண்டுளார் என்பதை, இத்துறையில் ஊன்றிப் பார்ப்பார் தெள்ளிதின் உணர்வர். இதனாலன்றோ செந்நாப் போதாரும்

> ''இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
> கழிபேர் இரையான்கண் நோய்''

- என்று கூறிப் போந்தார். நம் நாட்டாரிடைச் செல்வம் பெருகுவது ஒருவாறு நாட்டு வளப்பத்தைக் காட்டுவதாயின், அச் செல்வச் செருக்கால் அல்லும் பகலும் அள்ளி விழுங்கும் உணவு மிசைவால் மருத்துவர் பெருகுவது, நம் மக்கட்குப் போதிய உடல் பேணும் அறிவு இல்லை யென்பதனையும் காட்டு மன்றோ?

உணவு பெருமற் பசியால் துன்புறுவான் ஒருவன் அதைத் தேடிப் பெற்று உண்ணின், அப் பசிப்பிணி யடங்குதல்போல்,

கழி பேர் இரையான் நோயுற்ற ஞான்றை மருத்துவரின் திருத்த மிலா உதவியை நாடிப் போதலும், அவ்வாறு நாடிப் பெறினும் அந்நோய் அடங்குதலில்லாது மேன்மேலும் வந்து பற்றுதலும், இறுதியாக அந்நோயே அன்னவரை எடுத்து விழுங்குதலும் நாம் யாண்டும் காண்கின்ற காட்சிகளாம். இவற்றால் நாம் தெளிவது என்னை,

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய் அள வின்றிப் படும்

– என்பதுதானே! ஆதலின் நம் உடலைப் பேணற்கு மிகவும் உறுதுணையாக வல்ல உணவே, நோய்க்கு மன்றே வித்தாக வுள்ளது. பசிக்கு உண்ணுவது முறைதான்; ஆனால் வேட்கைக்கு உண்ணல் முடியுமோ?

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

என்னும் குறளால் நாம் பெறுவதும் இதுவே யன்றோ? இவ் வுணவு முறைகளில் பழந்தமிழர் எத்துணை விழிப்புடையவராக விருந்தனர் என்பதை நம் பண்டை நூல்கள் பலவற்றிலும் காணலாம். அறிஞர் பலரின் கூற்றுக்கும் விஞ்சி, அவர் வாய் மொழி செவி கொளாது, மீதூண் விரும்பும் அவ் வரை நாகரிகக் குறைமதியாளர்க்கு, அவ்வுணவால் வரும் நோய்களே பாடங் கற்பிக்குமல்லாது நம் போல்வார் அவர்க்கேற்றவை கூற வல்லரோ?

இனி, இத்தகு வரையற்ற உணவு முறைகளால் ஏற்படும் குறைபாடுகளை அடுத்தவிதழில் இன்னும் விரிவாகக் காண்போம்.

– (தொடரும்)

தென் மொழித் தொகுப்பு.

பொங்கல் மலர் இடையிணைந்த, ஒன்று முதல் பதினாறு இசைகளின், முந்தைய தென்மொழித் தொகுப்பு விலைக்குக் கிடைக்கும். விலை 5-50 உருபா.

உருபா ஆறு அனுப்பின் பதிவஞ்சலில் அனுப்பப் பெறும்.

— அமைச்சர்.



ஒரு மணித்துளியில் நடைபெறும் உலக நிகழ்ச்சிகள்

நாம் மிகப் பாரா முகமாய்ப் புறந்தள்ளும் ஒரு மணித் துளியில் (நிமிடத்தில்) உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வருமாறு.

இந்த ஒரு மணித்துளிக்குள் ஆறாயிரம் விண் கற்கள் நிலம் நோக்கிப் பாய்கின்றன. உலகம் தன்னைத் தானே சுற்றிக் கொள்வதில் தொள்ளாயிரத்தைம்பது கல் தொலைவு கடந்திருக்கும்; ஏறத்தாழ முப்பத்தெட்டுப் புயல்கள் உருவாகியிருக்கும். பதினான்காயிரம் பரும அடி மழை உலகின் பல பாகங்களில் பொழிந்திருக்கும். ஆறுகள் அந்த ஒரு மணித்துளிக்குள் மூன்று இலக்கத்து ஐம்பதாயிரம் 'டன்' தண்ணீரையும் வண்டலையும் கடலில் சேர்த்திருக்கும்.

ஒரு மணித்துளியில் உலகில் ஏறத்தாழ நூற்றுவர் இறந்திருப்பர். நூற்றுப்பதினான்கு குழந்தைகள் பிறந்திருக்கும். முப்பத்து நான்கு திருமணங்கள் நடைபெற்றிருக்கும். மூன்று இணை மணமக்கள் மண முறிவு செய்து கொண்டிருப்பர்.

உலகம் முழுவதிலும் ஈரிலக்கத்து எண்பதாயிரம் தொலைபேசி அழைப்புகள் நிகழ்ந்திருக்கும். அறுபது இலக்கம் வெண் சுருட்டுகள் புகைக்கப்பட்டிருக்கும். ஓரிலக்கத்துப் பதினாயிரம் தாளிகைகள் வாங்கப்பட்டிருக்கும்.

ஆறு இலக்கத்து முப்பத்தெட்டாயிரம் குடுவை (காலன்) வெறிநீர் (Drinks) குடிக்கப்பட்டிருக்கும். நான்காயிரம் 'டன்' உணவுப் பொருள்கள் உட்கொள்ளப்பட்டிருக்கும்.

மூவாயிரம் 'டன்' நிலக்கரியும் எழு நூறு 'டன்' இரும்பும் எஃகும் எடுபட்டிருக்கும். நான்காயிரத்து அறுநூறு இணை செருப்புகள் தைக்கப்பட்டிருக்கும். இப்புள்ளி விளக்கங்களை எல்லாம் மேற்கு செருமானி இதழொன்று வெளியிட்டுள்ளது.

சென்ற திங்களின் செய்திச் சுருக்கம்.

தை 21 (3-2-63) பிரஞ்சு மொழிக் கல்வியின் கலைக்கூடமாகப் புதுச்சேரி திகழும் என்றும், அங்கு ஆசியாவிற்கே உதவும் வகையில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப் பெறும் என்றும், அங்குக் கட்டவிருக்கும் மோதிலால் நேரு தொழிற் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டுகையில், திரு. ஃஉமாயூன் கபீர் குறிப்பிட்டார்.

தை 22 (4-2-63) 'எல்லா நாகரிகங்களும் ஒன்றுக இணைய வேண்டும்' என்று திரு. சி.பி. இராமசாமி ஐயரும், 'ஒவ்வோர் இனத்துக்கும் தனித்தனி மரபு உண்டென்றும், அது காக்கப்பெற வேண்டுமாயின், நாகரிகங்கள் தனித்தனியே வளரவிடப்பட வேண்டும்' என்றும் திரு. சி. என். அண்ணாதுரையும், அண்ணாமலைப் பல்கலைக் கழக விடுதி விழாவில் கருத்துகள் தெரிவித்தனர்.

தை 23 (5-2-63) அரசியல் சட்டப்படி இந்திதான் இந்தியாவின் பொது மொழியென்றும் ஆங்கிலம் உள்ள இடத்தைப் படிப்படியாக அது அடையும் என்றும் திரு. இலால் பகதூர் சாத்திரி, அந்தமானில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்.

தமிழே சென்னை மாநில ஆட்சி மொழியென்றும், எல்லா அரசியல் துறைகளிலும் அதனை மேற்கொள்ளும் செயல் காலப் போக்கில் நிகழுமென்றும், எவர் தடுத்தாலும் இச்செயல் தடையுருது என்றும், சென்னை மேல் அவையில் கல்வி யமைச்சர் திரு. பக்தவத்சலம் உறுதி கூறினார்.

மாசி 2 (14-2-63) ஏறத்தாழ உலகில் உள்ள 80 கோடிக் குழந்தைகளில் பகுதிக் குழந்தைகள் பிறந்த ஓராண்டிற்குள்ளேயே மடிந்து விடுவதாகவும், அதற்குப் பசியே காரணம் என்றும், உலக வேளாண்மை உணவு அமைப்பின் இயக்குநர் பர் பி. ஆர். சென் நியூயார்க்கில் ஒரு கூட்டத்தில் அறிவித்தார்.

மாசி 3 (15-2-63) பெண்கள் தாமாகக் கெடுவதில்லை யென்றும், ஆண்களும் பெண்கள் கெட்டுப் போவதற்குக் காரணமாயுள்ளனர் என்றும், ஆண் பெண் செய்யும் இவ்வொழுக்கக் கேடுகளாற் பிறக்கும் குழந்தைகள்

வருத்தத்திற்குரிய முறையில் இழிவு படுத்தப் பெறுகின்றனர் என்றும், நாட்டில் பரத்திமைத் தொழிலை அடியோடு தொலைக்க முயற்சி செய்யவேண்டும் என்றும், வேலூர் செவிலியர் பயிற்சிப் பள்ளித் தலைவி திருவாட்டி ஏ. குருவில்லா ஒரு கூட்டத்தில் வற்புறுத்தினர்.

● நாட்டு மருத்துவக் கல்லூரி ஒன்று தமிழகத்தில் விரைவில் நிறுவப் பெறுமென பொதுநல அமைச்சர் திருவாட்டி சோதி - வேங்கடாசலம் மதுரையில் கூறினர்.

மாசி 6 (18-2-63) ஆங்கிலம் மக்கள் விரும்பும் வரை அகற்றப்பட மாட்டாது என்று பாராளுமன்றப் பேராயக்கட்சிக் கூட்டத்தில் திரு. நேரு உறுதியளித்தார்.

மாசி 9 (21-2-63) இந்தித் தேர்வைத் தமிழக அரசினர் விலக்கியது பற்றிக் குறிப்பிடுகையில் திரு. இலால் பகதூர் சாத்திரி, தேசிய ஒருமைப்பாடு மாநாட்டில் மும்மொழிகளைப்பற்றி யெடுக்கப்பட்ட முடிவுக்கு மாறுகும் இம் முடிவு என்று குறிப்பிட்டார்.

மாசி 10 (21-2-63) புதுச்சேரி முதலிய முன்னைய பிரஞ்சுப் பகுதிகளில் தொடர்ந்து பிரஞ்சு மொழியே ஆட்சி மொழியாகவிருந்து வரும் என்று பாராளுமன்றக் கூட்டத்தில் அறிவிக்கப் பெற்றது.

மாசி 14 (26-2-63) தமிழகக் கல்வி முறையை மீண்டும் மாற்றியமைப்பதுபற்றிச் சென்னை அமைச்சர்கள் கூடிப்பேசினர். இதை நன்கு ஆய்ந்த பின்னரே முடிவெடுக்கப் படும் என்று கூட்டத்தினர் முடிவு செய்தனர்.

- மார்ச்சுத் திங்கள் முதல் நாளிலிருந்து மேலும் சில அரசினர் அலுவலகங்களில் தமிழையே ஆட்சி மொழியாக்கி, மாநில அரசினர் கட்டளை பிறப்பித்துள்ளனர். *

கேள்விச் செல்வம்:

பல எதிர்பாராத் தடைகளால் கேள்விச்செல்வம் பகுதி இவ்விதழில் இடம்பெறவில்லை. அன்பர்கள் பொறுக்க............ *ஆசிரியர்.*

உடலியல்

இவ்வுலகத்து நாம் பெற்ற உடலே உயிர்க்கு உருவாயும், அதன் உய்விற்குக் கருவாயும் அமைந்திருத்தலான், அதனை முதற்கண் நன்குபேணி வருவதும் அதன் வழி அதனுள்ளமைந்த உள்ளத்தை நாட்கு நாள் உயர்த்தி இம்மாந்த வாழ்வை உய்விப்பதுமே வாழ்க்கை எனப்படும்.

ஆதலின் நாம் ஈண்டுப் பெற்ற துணைக் கரணக் கருப்பொருள்களான், உடலையும் உள்ளத்தையும் வளர்த்து அவ்வழி, வினை நிகழ்வுகளைச் செய்தல் இன்றியமையாததாம்.

நிலத்தை ஒளி, வளி, நீர், எரு முதலியன இட்டு வளமையேற்றி, உயிர்க்கருவூன்றிச் செடி கொடி மரம் முதலிய நிலைத்திணைகளை உண்டாக்கிப் பயன் துய்ப்பதுபோல், இவ்வுடலையும், ஒளி, வளி, நீர், எரு முதலியவற்றால் புரப்பதே உடல் நலம் பேணும் முறையாம் என்று கொள்க. என்னை? என்பு, குருதி, தசை, நார் முதலியவற்றான் உண்டாகிய இச் சட்டகத்திற்கு, நிலைத்திணைகட் கிடுதல்போல் ஒளி, வளி நீர், எரு முதலியன விடுதல் யாங்ஙன் எனில் முறையே கூறுதும்.

ஒளி நலம்:

இவ்வகன்ற புடவி (Universe) ஒளி வண்ணமாகவே திகழ்கின்றது. விரிந்து பரந்து பெருகியுள்ள இப்பெரும் புடவியினுள்ளடங்கிய பன்னூறாயிரங் கோடி ஒளி மண்டிலங்களுள், நாம் உயிர்ப்பது கதிரவன் ஒளி மண்டிலத்திலேயே என்பதை நாம் அறிவோம். இக் கதிரவன் ஒளி மண்டிலத்துள் இயங்கிக் கொண்டிருக்கும் பல கோள்களுள் ஒன்றாகிய இந் நிலவுலகம், அக் கதிரொளி வழி உயிர்க் கூறுபாட்டிற்கு வேண்டிய எல்லாப் பொருளையும் பெற்றுத் தன்பாலுள்ள, உயிரிகளைப் புரந்து வரு

கின்றது என்னை? இந்நிலவோட்டின் மேற்போகாகப் பொதுளிய குறுமைப் பசும்புல் தொடங்கி உடலாலும் உளத்தாலும் அறிவாலும் சிறந்து விளங்கும் மாந்தர் உள்ளிட்ட எல்லா உயிர்கட்கும் அடிப்படையாக நின்று இயங்குவது இக்கதிரவன் ஒளியே என்பதில் துளியும் ஐயமுண்டோ?

இனிக் கதிரவன் ஒளிபடுவதாகக் கூறப்பெறும் பிற சில கோள்களில் நம் போன்ற உயிரிகள் உளவாகக் காண்கிலமே யெனின், கதிரவன் ஒளி ஒன்று தானுமே உயிர்த் தோற்றத்திற் கும் புரப்பிற்கும் காரணமில்லையே! அதனொடு மிடைந்த வளி, நீர், எருவாகிய வேறு உயிர்க்கூறு கலந்த பொருள்கள் இல்லாமைப் பொருட்டே வேறு சில உலகங்கள் உயிர் தோன்ரு வெற்றுப் பாழ்நிலங்களாகவே இன்றளவும் உளவாக அறிவியல், உயிரியல் வல்லார் தெளிந்து தேர்கின்றனர்.

உயிர்த் தோற்றத்திற்கு முதல் முழுக் காரணமாக ஒளி இருத்தல் பற்றியே, அறிவும் உள்ளமும் அவை வழி நல்லுணர்வும் குயின்ற பழந்தமிழர், அதனையே முழு முதல் தெய்வமாக வழிபட்டனர் என்க. இதன் தோற்றமும் வளர்ச்சியும், சிறப்பும் விளக்கமும் வேறு வேறு இடங்களில் இனி வரும் இதழ்களிற் கூறப்பெறும்.

இனி ஒளி வழியே வளியும், வளி நின்று நீரும், நீர் நின்று நிலமும் தோன்று மாகலின் உடற்புரப்புக்கு யாவற்றினும் முதல் தேவையாக ஒளி வேண்டுவதாயிற்று என்க.

கதிரவனின்று வெளிவரும் ஒளிக் கற்றையினுள் உயிர்த் தோற்றத்திற்கு மிகவும் இன்றியமையா உயிர்க்கூறுகள் பலவும் நிறைந்துள்ளன. அவையே காற்ருகவும் கனப்பாகவும் வித்தாகவும் விளைவாகவும் கூர்தலுற்று விரிந்து இந்நில வுலகமெங்கும் படிந்து அவ்வப்போழ்து தோன்றும் உயிர்த் தொகுதியைப் போற்றிப் புரந்து வருகின்றன. உயிர்த் தோற்றங்களாலும் நிலைப்பாலும் செலவாக்கப் பெற்று வரும் இவ்வுயிரொளிக் கூறுபாடுகள் மீண்டும் மீண்டும் அக்கதிரவன் ஒளியினின்று அனுப்பப்பெறும் உயிர் மூலகங்களால் நிறைவு செய்யப்பெற்று

மேலும் மேலும் உயிர்த் தொகுதியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக நிற்கின்றன. அதன் பொருட்டே, இவ்வுலகம்தோன்றி ஏறத்தாழ நானூறு கோடியாண்டுகளாகியும் அதில் உயிர் தோன்றி நூறு கோடியாண்டுகளாகியும் அவையனைத்திற்கும் போதுமான உயிர் மூலப் பொருள்களை அவ்வப்பொழுது கதிரொளியினின்று இந்நிலவுகம் பெற்றுக் காத்தல் செய்து வருகின்றது.

இதுகாறும் ஒருவாறு எடுத்துக் கூறியவற்றால் உயிர் வாழ்விற்கு ஒளியே அடிப்படையான தேவையென்றும், அதுவே இவ்வுடலின் நலத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளதென்றும் பொதுவாக அறிந்தோம்.

இனி, அவ்வொளியால் இவ்வுடல் எவ்வெவ்வகை நலன்களைப் பெறமுடியுமென்பதையும், அவ்வாறு பெருக்கால் இவ்வுடல் எவ்வெவ் வகையில் கேடுற்றுச் சிதையுமென்பதையும் சிறப்பாக அடுத்த இதழில் ஓரளவு பேசுவோம். (தொடரும்)

அடுத்த இதழில்.

மொழிப் பேரறிஞர்.

ஞா. தேவநேயப் பாவாணர்

அவர்கள் எழுதும்

'தமிழ் தனித்தியங்குமா ?'

என்ற அரிய ஆராய்ச்சிக் கட்டுரை இடம் பெறுகின்றது. தமிழ் அன்பர்கள் தவறாது வாங்கிப் படித்துப் பயனடைக.

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

கையொப்பம்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்.	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஒன்றரை உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

குறைந்த செலவில் மிகவும்
வெண்மையாக வெளுக்கின்றன.

ராசேசுவரி சோப்புக் கட்டிகளையே

உங்கள் துணிகளுக்குப் பயன்படுத்துங்கள்.

பிற விளக்கங்கட்கு:

Rajeswari Soap Works,

Nanayakkara Chetty Street, TANJORE.

Prop: **G. PARAMASIVAM.**

"தென்மொழி" பற்றி

'தென்மொழி' பல சான்ளேர்களின் சீரிய கட்டுரைகளைக் கொண்டு திகழ்கின்றது. ஆழ்ந்த துயிலிற் கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி உணர்ச்சியூட்டுந் தகைமையில் தனக்குத்தானே நிகரானது. எல்லா வகையானும் சாலச் சிறந்த இதனை வரவேற்கின்ளேம். செந்தமிழ் அன்பர்கள் இதனை வாங்கியும் வாங்குவித்தும் வண்பயன் எய்துவார்களாக.

செந்தமிழச் செல்வி
சிலம்பு 34 பரல் 2

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுதற் பொருட்டே ஒரு தாளிகை தோன்றுகிறதெனின் அத்தாளிகைக் கின்றியமையாத பெருந் தகுதி மொழித் துறைத் தகுதியாகும். இத்தகுதி முற்றிலும் வாய்ந்த தனித் தமிழ்த் தாளிகை தென்மொழி......தமிழைப் பேணி வளர்ப்பதற்காக எழுந்துள்ள இத்தாளிகையைத் தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் (உறுப்பினராகச் சேர்ந்து) வாங்கிப் போற்றுதல் வேண்டும். இது தமிழரின் முதற் கடமையாகும்......

தமிழ் முரசு
சிங்கப்பூர் 13—9—59.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்று, தமிழையும் உரு மாற்றம் செய்து மகிழச் சில தீய சக்திகள் தமிழகத்தில் உலவி வருகின்றன. கேடுதரும் அவற்றை வெட்டிச் சாய்த்துப் புதைக்கும் நோக்குடன் தென்மொழி வீறு கொண்டு முழக்கமிடத் தொடங்கியிருக்கின்றது ..தென்மொழியைப் பேணிக்காப்பது தமிழ் மக்களின் கடமை என்பதைத் தமிழகம் உணரவேண்டும்.

நவ இந்தியா
14—10—59.

தென்மொழியே! தேன் கருத்தே! தமிழ்ச் சர்க்கரைக் கட்டியே! அரைகுறைப் படிப்பாளிகள், கலப்படமான தமிழ் நடையில்தான் எழுதி வருகிருர்கள் என்ற பெரும் புலவர் மனக் குறையைப் போக்க வந்த தனித்தமிழ்ப் பெட்டகம் நீ! உன் கருத்து முழுதும் தேன். ஆம்! தனித் தமிழைச் சுவைக்க விரும்புவார்க்குக் கலப்பில்லாத தனி இனிப்பு. கரடு முருடில்லாத தனித்தமிழ் கூட எழுத முடியும் என்பதற்குத் தென்மொழி ஏடு தலைசிறந்த எடுத்துக் காட்டு......

விடுதலை
21—4—60.